# பாட்டாளி சிந்தனை

Volume 23 No. 9
May 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா
SUCI
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ. 3.00

## சென்னை

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 65வது ஸ்தாபக தின பொதுக்கூட்டம்

எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 65வது ஸ்தாபகதினக் கூட்டம் சென்னை, வியாசர்பாடி, மகாகவி பாரதியார் நகரில் கட்சியின் மாநில அமைப்புக் கமிட்டி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இப் பொதுக்கூட்டத்திற்கு தோழர் Aரெங்கசாமி, தமிழ்நாடு மாநிலச் செயலாளர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) தலைமை தாங்கினார். பொதுக்கூட்டத்திற்கு முன்பாக பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும் இக்காலக்கட்டத்தின் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரும் எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகரும் ஆசிரியருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் உருவப் படத்திற்கு தோழர் சி கே லூகோஸ், மத்தியக் கமிட்டி உறுப்பினர் மலர்மாலை அணிவித்து செவ்வணக்கம் செலுத்தினார். தோழர் A ரெங்கசாமி தலைமையுரையாற்றினார்.

இப் பொதுக்கூட்டத்தில் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரும் கேரள மாநிலச் செயலாளருமான தோழர் சி கே லூகோஸ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவரது ஆங்கில உரையின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் தமிழநாடு மாநில அமைப்புக் கமிடடி செயலாளர் தோழர் A ரெங்கசாமி அவர்களே, எனது உரையை .தமிழாக்கம் செய்யவிருக்கும் மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் அனவரதன் அவர்களே! தோழர்களே! நண்பர்களே! தமிழில் உரையாற்ற இயலாததற்கு முதலில் என் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோழர்களே! நண்பர்களே! இந்த பொதுக்கூட்டம் எமது அன்பிற்குரிய எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்)யின் ஸ்தாபகதினத்தையொட்டி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபக தினம் கிட்டத்தட்ட நாடெங்கிலும் பல முக்கிய மாநிலங்களில், 22 மாநிலங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது. இன்றொருநாள் மட்டுமல்ல ஒருவாரத்திற்கு புத்தகவிற்பனை, பொன்மொழிகள் கண்காட்சி, பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் மூலம் நாட்டு மக்களுக்கு எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சி எவ்வாறு இன்னபிற அரசியல் கட்சிகளிலிருந்து தெள்ளத்தெளிவாக வேறுபட்டு இருக்கிறது என்றும் இக் கட்சியின் அரசியலை, கட்சியின் தலைவர்கள் தொண்டர்களின் கலாச்சார நீதிநெறிகளை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறும் விதமாக இந்த ஸ்தாபகதினம் அனுஷ்டிக்கப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால் இந்த கட்சியைப்பற்றி ஒரு வார்த்தைக்கூட பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் வருவதில்லை. இந்த கட்சி உயர்ந்த கொள்கைகளினடிப் படையில் படிப்படியாக வளர்ந்துவருகிறது. இந்த கூட்டத்தின் தலைவர் தோழர் A ரெங்கசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல் மக்கள் கோரிக்கைகளடங்கிய மனுவில் 3.57கோடி கையெழுத்துக்களைப் பெற்று, கடந்த வருடம் மார்ச் 14ம் தேதி தலைநகர் டெல்லியையே ஸ்தம்பிக்கச்செய்த 1 லட்சத்திற்குமதிகமான மக்களைக் கொண்டு எமது கட்சி நடத்திய மாபெரும் பேரணிப்பற்றிய செய்தியை அனைத்துப் பத்திரிகைகளும் ஊடகங்களும் முற்றாக இருட்டடிப்பு செய்தது ஏன்? அல்லது

தொடர்ச்சி 7ம் பக்கம்

## தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா

# மக்களின் உணவுப் பாதுகாப்பை எந்த அளவிற்கு உறுதி செய்கிறது

கடந்த டிசம்பர் 2011ல் தற்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐ மு கூட்டணி அரசாங்கம் தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. இம்மசோதா பெரும் விமர்சனத்திற்குள்ளானதையடுத்து உணவு நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோகத்திற்கான பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டது. நிலைக்குழு தனது அறிக்கையை கடந்த 11.01.2013 அன்று லோக்சபாவிடம் சமர்ப்பித்தது. இதையடுத்து நிலைக்குழுவின் பரிந்துரைகளில் சாத்தியமானவற்றை சேர்த்து அமைச்சரவையின் ஒப்புதலுக்குப்பிறகு இம்மசோதா மீண்டும் பாராளுமன்றத்தில் மறுதாக்கல் செய்யப்பட்டது.

நாட்டில் எத்தகைய சூழ்நிலை நிலவுகையில் இம்மசோதா தாக்கல் செய்யப் பட்டுள்ளது? அணு ஆற்றல் நாடாக பெருத்துவிட்ட அதி சக்திமிக்க இந்திய முதலாளித்துவ நாட்டில் சாதாரண குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் வேலையில்லா பிரச்சினை பெருங்கொடுமையாகிவிட்ட நிலையில் ஆட்சியிலுள்ளோரின் வாக்குறுதி களெல்லாம் பொய்த்துப்போய் தொழில் துறையானது மீண்டு வரமுடியாமல் மென்மேலும் நசிந்து கொண்டிருக்கையில் பொருளாதார வளரச்சி என்பது கானல் நீராகிக்கொண்டிருக்க வறுமை கோலோச்சிக்கொண்டும் விலைகள் விண்ணைமுட்ட அதிகரித்துக்கொண்டும் இவற்றின் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி வேகமாக வீழ்ந்துகொண்டுமிருக்கையில் பட்டினியாலும் கல்வி மருத்துவ வசதிகள் இன்மையாலும் பீடிக்கப்படுவோர் ஏழைகள் மட்டுமே என்ற நிலைமாறி விவசாயிகளும் நடுத்தர வர்க்கத்தினரும்கூட கடன் பொறியில் சிக்கி உயிரை மாய்த்துக்கொள்கின்ற செய்திகள் அதிகரித்துக்கொண்டிருக்கையில் தங்கள் குழந்தை களின் கல்விக்காகவும் குடும்பத்தின் மருத்துவ செலவினங்களுக்காகவும் தங்கள் மென்னி முறிய பெற்றோர்கள் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாவற்றுக்கும் எதிராக மக்களின் கோபமும் எதிர்ப்புணர்வும் அதிகரித்து வருகின்றன; எரிச்சலும் கோபமும் கொண்ட மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு நியாயமான கோரிக்கை ஏதோ ஒன்றிற்காக வீதிகளில் களமிறங்குகிறார்கள். நியாய விலையில் உணவுப்பொருட்களையும் இதர அத்தியாவசியப்பொருட்களையும் வழங்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாக உள்ளது. இவ்வெதிர்ப்புகளை எதிர்கொள்கின்ற அரசாங்கம் வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலை மனதிற்கொண்டு மக்களுக்கு உணவுப்பாதுகாப்பு வழங்கப்போகிறோம் என்ற விளையாட்டை துவக்கியுள்ளது. வாழ்வின் அடிப்படை தேவை பூர்த்தியாவது செய்வது உறுதிபடுத்தப்படுமா என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுவது இயற்கையே. அதே சமயம் அரசாங்கம் கொண்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் பலன்கள் உரிய அளவில் உரியவர்களுக்கு கிடைக்காமல் போவதுபோல் இதுவும் அதே கதியை அடைந்துவிடுமோ என்ற கிலேசமும் மனதில் எழுகிறது. எனவே இம்மசோதாவில் என்னதான் உள்ளது? யதார்த்தத்தில் இது என்ன சாதிக்க முடியும் என்பதை ஆழமாக ஆராய வேண்டியுள்ளது.

தொடர்ச்சி 2ம் பக்கம்



ஏப்ரல் 24 அன்று கல்கத்தாவில் நடைபெற்ற எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)ன் 65வது ஸ்தாபக தினப் பொதுக்கூட்டம் உள்ளே, கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் உரையாற்றுகிறார்.

## தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா

# இலக்காக கொள்ளப்பட்ட மக்கள் யார் என்பதை சரியாக வரையறுக்கத் தவறிவிட்டது

1ம் பக்கம் தொடர்ச்சி

### இம்மசோதாவில் உள்ளது என்ன?

அரசியல் அமைப்புச்சட்டத்தில் காணும் கடமைப் பொறுப்போடும் சர்வதேச கன்வென்ஷன்களின் நிபந்தனைகள் வழிமுறைகளை பின்பற்றியும் இச்சட்டம் இயற்றப்படுவதாக இம்மசோதாவின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கு போதுமான அளவுக்கான உணவை கட்டுப்படியாகக்கூடிய விலையில் பெறுவதை உறுதி செய்வதன் மூலம் மக்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு வழங்குவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். இதுவே அரசாங்கத்தின் கொள்கையும் திட்டமும் ஆகும். தற்போது அரசாங்கம் பின்பற்றி வரும் மக்கள் நலன் என்ற அணுகுமுறையிலிருந்து உரிமை அடிப்படையிலான அணுகுமுறைக்கு மாறுவதையும் இம்மசோதா இலக்காக கொண்டுள்ளது. இலக்காக கொள்ளப்பட்ட பொது விநியோக முறையின் கீழ் (Targeted Public Distribution System - TPDS) கிராமப்புற மக்களில் 75 சதவிகிதத்தினரும் நகர்ப்புற மக்களில் 50 சதவிகிதத்தினரும் பயன்பெறுவர் என்று இம்மசோதா கூறுகிறது. அரசாங்கம் உணவுப்பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய இந்த பயனாளிகள் யார்? இவர்கள் ஏழைகளிலும் ஏழைகளாகத்தான் இருக்க முடியும். இவர்களை வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்வோர் என்றோ அல்லது வேறு எவ்வாறாக வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளலாம். ஆனால் சுதந்திரம் பெற்று 66 ஆண்டுகளாகிவிட்டபோதிலும் இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. சுதந்திர இந்தியாவில் தங்களுக்காக ஒரு வேளை உணவைக்கூட வாங்கும் சக்தி இல்லாமல் எந்த அளவிற்கு கதியின்றி இருந்தால் அவர்களுக்கான உணவுப்பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்? இம்மசோதாவின் மூல வரைவில் இரண்டு வகைப்பட்ட மக்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். 1. முன்னுரிமை குடும்பங்கள் (Priority). 2. பொதுவான குடும்பங்கள். பாராளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்த திருத்தங்களின்படி இவ்விருவகையான குடும்பங்களும் தகுதிவாய்ந்த குடும்பங்கள் என மாற்றப்பட்டன. மசோதாவின் ஓரிடத்தில் முந்தைய முன்னுரிமை குடும்பங்கள் மற்றும் அந்த்யோத்ய அன்ன யோஜ்னா திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்கள் ஆகியவை தகுதிவாய்ந்த குடும்பங்களாக கருதப்படுகின்றன. (பிரிவு 15 உட்பிரிவு 2 மற்றும் பிரிவு 3ன் உட்பரிவு 1). மசோதாவின் மற்றொரு இடத்தில் (பிரிவு 19ன் உட்பிரிவு 1) முன்னுரிமை குடும்பங்கள் பொதுக் குடும்பங்கள் ஆகிய இருவகையினருமே தகுதிவாய்ந்த குடும்பங்களாக கருதப்படுகின்றனர். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் (குழந்தை பிறந்த 6 மாதங்கள் வரை) குழந்தைகள் ஆதரவற்றோர் வீடற்றோர் பட்டினி கிடப்போர் மீதும் இம்மசோதா சிறப்பு கவனம் செலுத்துகிறது.

எது எவ்வாறாயினும் முன்னுரிமை குடும்பங்களிலுள்ள ஒவ்வொருவரும் மாதத்திற்கு 7 கி கி உணவு தானியமும் பொதுக்குடும்பங்களை சேர்ந்த ஒவ்வொருவரும் 3 கி கி உணவு தானியமும் ஒவ்வொரு மாதமும் பெறுவர் என்று இம்மசோதா கூறுகிறது. அரிசி ஒரு கி கி ரூ.3 கோதுமை ஒரு கி கி ரூ.2 பதப்படுத்தப்படாத இதர தானியங்கள் 1 கி கி ரூ.1 என்ற ரேட்டில் மானிய விலையில் வழங்கப்படும். திருத்தப்பட்ட மசோதாவில் இந்த அளவுகள் மாற்றப்பட்டுள்ளன. முன்னுரிமை குடும்பங்களில் நபர் ஒருவருக்கு மாதத்திற்கு 5 கி கி தானியங்களும் அந்த்யோத்ய அன்ன யோஜ்னா குடும்பங்களுக்கு மாதம் ஒன்றிற்கு 35 கி கி தானியங்களும் இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் என்று அளவுகள் திருத்தப்பட்டுள்ளன. நிலைக்குழுவின் பரிந்துரைகளின்படி இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. ஏனெனில் ஒரு நபருக்கு மாதத்திற்கு 7 கி கி தானியங்கள் வழங்குவது நடைமுறை சாத்தியத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாக நிலைக்குழு கருதியது. ஏனெனில். இந்த அளவிற்கு வழங்குவதற்கு உற்பத்தியாளர்களான விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கொள்முதல் செய்கின்ற தானியங்களைக்காட்டிலும் அதிக அளவிலான தானியங்கள் தேவைப்படும் அல்லது தேவையைக் காட்டிலும் சொற்ப அளவில் அதிகமாகத்தான் கொள்முதல் செய்யப்படும். நீண்டகால கொள்முதல் பொதுவாக குறைவாகவே இருக்கும். அதாவது உற்பத்தியில் சராசரி கொள்முதல் 30 சதவிகிதத்திற்கும் சற்று அதிகமாக இருக்கும். இவ்வாறு உற்பத்தியைக் காட்டிலும் தேவை அதிகமாக இருக்கும் என்பதால் 7 கி கி என்ற அளவிற்கு பதிலாக 5 கி கி என்ற அளவை நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வரும் பயனாளிகள் அனைவருக்கும் இந்த அளவில் தானியங்கள் வழங்குவதை நிர்வகிக்க இயலும் என இக்குழு கருதியது.

இலகுவான வேலை முதல் சராசரியான அளவிற்கு வேலை செய்யும் சாதாரண மனிதனுக்கு நாளொன்றுக்கு சராசரியாக 2300 கலோரி சத்து தேவைப்படும். இலகுவாகவும் இன்றி கடின உழைப்பாகவும் இல்லாத நடுத்தரமாக வேலை செய்யும் மனிதனுக்கு 2800 கலோரிகளும் கடின உழைப்பாளிக்கு 3500 கலோரிகளும் தேவைப்படும். அதே போல் இலகுவாக நடுத்தரமாக கடினமாக வேலை செய்யும் பெண்களுக்கு நாளொன்றுக்கு முறையே 1800, 2250, 2700 கலோரிகள் தேவைப்படும். மாதமொன்றிற்கு ஒரு நபருக்கு 7 கிகி தானியம் வழங்கினால் ஒரு நாளில் அவருக்கு 230 கிராம்கள் கிடைக்கும். இந்த எடையுள்ள கோதுமையிலிருந்து 750 கலோரிகளும் அதே எடையுள்ள அரிசியிலிருந்து 250 கலோரிகளும் மட்டுமே கிடைக்கும். இவையிரண்டுமே ஒரு சராசரி மனிதனுக்கு தேவையான கலோரி சத்தை எவ்விதத்திலும் வழங்க முடியாது.

எதிர்பார்த்தது போலவே இந்த உணவுப் பொருட்கள் பொது விநியோக முறையின் மூலம் மக்களுக்கு வழங்கப்படும். பி டி எஸ் எனப்படும் இந்த பொது விநியோக திட்டம் இந்த மசோதாவில் இலக்காக கொள்ளப்பட்ட பொது விநியோக திட்டம் டி பி டி எஸ் (TPDS) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மத்தியமாநில அரசாங்கங்கள் குறியிலக்கிடப்பட்ட பொது விநியோக திட்டத்தில் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் படிப்படியாக முன்னேற்றம் காண்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளவேண்டும் என்று இந்த மசோதா தெரிவிக்கிறது. குறைந்தது 8 சீர்திருத்தங்களை இம்மசோதா தெரிவிக்கிறது. அவற்றில்

1. உணவுப்பொருட்களை வீடுகளுக்கே சென்று சப்ளை செய்தல்
2. தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை பிரயோகித்தல்
3. ஆதார் திட்டத்தின் அடிப்படையில் செயல்படுத்துதல்
4. பணமாற்றம் (Cash Transfer) போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்துதல்
5. பதிவுருக்களில் ஒளிவு மறைவற்ற தன்மை போன்றவை உள்ளடங்கும்

இம்மசோதாவின் மொத்தமுள்ள 17 பக்கங்களில் குறைந்தது 7 பக்கங்களுக்காவது குறை தீர்ப்பு முறைகளைப்பற்றியும் மாநில அளவில் மாநில உணவுக் கமிஷனும் தேசிய அளவில் தேசிய உணவுக் கமிஷனும் அமைப்பதை பற்றியும் உணவுப்பாதுகாப்பிற்கு மத்திய–மாநில அரசாங்கங்களின் கடப்பாடுகள் என்ன என்பது பற்றியும் உள்ளாட்சி அமைப்புகளின் கடப்பாடுகள் பற்றியும் ஒளிவு மறைவற்ற தன்மை மற்றும் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு பற்றியும் இன்னும் இதுபோன்ற வேறு சில விஷயங்களையும் விளக்குகிறது. ஆனால் உற்பத்தி, கொள்முதல் விநியோகம் ஆகியவற்றில் தொடங்கி நியாய விலைக் கடைகளில் நுகர்வோருக்கு உணவுப்பொருட்களை வழங்குவது வரை பொது விநியோக திட்டம் முழுவதையும் ஆட்கொண்டு எங்கெங்கும் வியாபித்து பரவி வரும் ஊழல் பற்றி இம்மசோதா ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

இறுதியாக மசோதாவின் பிரிவு 9 இவ்வாறு கூறுகிறது; “அவசர காலம் ஏற்பட்டுள்ளது என்றோ பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ளது என்றோ மாநில அரசாங்கம் கருதினால் அவ்வாறு பாதிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இரு வேளை உணவை மாநில அரசாங்கம் இலவசமாக தரவேண்டும். மத்திய அரசாங்கத்தால் சொல்லப்பட்ட செலவினம் பகிர்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு இயைந்தவாறு இந்த இலவச உணவு வழங்கவேண்டும். ஆனால் இதே மசோதாவின் இறுதியில் பிரிவு 52ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. யுத்தம், வெள்ளம், பஞ்சம், நெருப்பு, புயல், பூகம்பம் இதுபோன்ற பிற கடவுள் செயல்களால் இம்மசோதாவில் சொல்லப்பட்டதுபோல மத்திய அல்லது மாநில அரசாங்கங்களால் உணவு தானியங்களோ உணவோ வழங்க இயலாமற்போகும் பட்சத்தில் அதனால் ஏற்படும் இழப்புகள் சேதம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை குடும்பங்கள் அல்லது பொதுக்குடும்பங்களை சேர்ந்த நபர்கள் நஷ்ட ஈடு கோருவாராயின் அத்தகைய நஷ்ட ஈடு வழங்குவதற்கு மத்திய அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கமோ பாத்தியப்படவில்லை என்று கூறுகிறது.

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன : கடமைப்பொறுப்புகளும் அவற்றை நிறைவேற்றலும்

மசோதாவின் சாராம்சம் பற்றி சுருக்கமாக மேலே கண்டோம். இனி அதன் பல்வேறு பிரிவுகளை தனித்தனியாக காணலாம். முதலாவதாக சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகளுக்குப்பிறகு அரசியலமைப்புச்சட்ட கடப்பாடுகளின்படியும் சர்வதேச கன்வென்ஷன்களின் படியும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று புதிதாக அரசாங்கத்திற்கு தோன்றியது ஏன்? அப்படியானால் இவ்வளவு காலமும் அதிகாரத்தில் இருந்தவர்கள் இக்கடமைகளை நிறைவேற்றத்தவறி விட்டனர் என்று பொருளாகாதா? அவர்கள் ஏன் இவற்றை நிறைவேற்றவில்லை? அவர்கள் மக்களைப் பற்றி நினைத்துப்பார்க்கவில்லையா? அப்படியானால் வேறு எதைப்பற்றி யாரைப்பற்றி அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள்?

நம்மை ஈர்க்கும் மற்றொரு கேள்வி யாதெனில் உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் பலர் இந்தியர்களாக இருக்கிறார்கள் என தற்பெருமை பேசும் ஒரு நாட்டில் மக்கள் தங்கள் சொந்த சம்பாத்தியத்தில் தங்களது வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையும் அவர்களது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பிரச்சினையை அரசாங்கம் எழுப்ப வேண்டிய நிலையும் ஏன் ஏற்பட்டுள்ளது? இராணுவத்திற்கும் அதிகார வர்க்கத்தின் சுகபோகங்களுக்கும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை செலவிடுகின்ற அரசாங்கம் நெருக்கடியில் சிக்கியுள்ள ஏகபோக முதலாளிகளை மீட்பதற்கு கோடிக் கணக்கில் நிவாரணமும் ஊக்குவிப்பு தொகையும் வழங்குகின்ற ஒரு நாடு பூகோள பட்டினி குறியீட்டில் 81 நாடுகளில் 15வது இடத்தில் இருப்பதும் இக்குறியீடு 1996க்கும் 2011க்கும் இடைப்பட்ட காலத்தில் 22.9லிருந்து 23.7ஆக உயர்ந்ததற்கும் தமது ஏழை குடிமக்களின் வறுமையை நீக்குவதற்கான நிதி ஆதாரங்களை திரட்ட முடியாமல் போனதற்கும் காரணம் என்ன என்ற கேள்வியும் நம்மை ஆட்கொள்கிறது. (பூகோள பட்டினி குறியீடு என்பது மொத்த மக்கள் தொகையில் சத்துக்குறைவுள்ள மக்களின் விகிதாசாரம் எடைக்குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை குழந்தை மரண விகிதாசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.)

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன: இழிநிலையில் வாழ்வோர் யார் என்றும் ஆதரவு யாருக்கு தேவைப்படுகிறது என்றும் கண்டறிவதற்கு தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்ட குழப்பும் நிபந்தனைகள்

நாட்டில் ஏழைகளிலும் ஏழைகளாக உள்ளவர்களை பயனாளிகளாக இம்மசோதா கொள்கிறது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். ஆனால் ஏழைகளின் எண்ணிக்கை அரசாங்கங்களுக்கு என்றுமே தொந்தரவான விஷயம்தான். ஏனெனில் ஏழைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது அதிக வறுமையையே குறிக்கிறது. அதிக வறுமை அரசாங்கத்திடமிருந்து அதிக கடமையையும் பொறுப்பையும் கோருகிறது. அது மட்டுமின்றி இன்றைய உலகமயக்காலக் கட்டத்தில் அரசாங்கங்களுக்கு மிகவும் சங்கடம் அளிக்கக் கூடிய விஷயமுமாகும். ஏனெனில், இந்த உலகமயச் சந்தையில் இந்திய ஆளும் வர்க்கம் தன்னை ஒரு மிகப் பெரும் சக்தியாக தன்னை காட்டிக்கொள்ள விரும்புகிறது. இவ்வாறு காட்டிக்கொள்வதால் இந்திய மூலதனத்திற்கு உலகச்சந்தையில் ஒரு பங்கு கிடைக்க உதவும் என்று அது நினைக்கின்றது. அதனால்தான் ஏழைகளை கணக்கிடுவதிலும் அவர்களது எண்ணிக்கையிலும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# நாட்டின் மின்சக்தி பிரச்சினை குறித்த அணுகுமுறை குறித்து அகில இந்திய மாநாடு

சென்னையில் கடந்த ஏப்ரல் **6, 2013** அன்று ''நாட்டில் மின்சக்தி பிரச்சினை குறித்த அணுகுமுறை'' என்ற தலைப்பில் அகில இந்திய மாநாடு ஒன்றை பாதுகாப்பான எரிசக்திக்கான மக்கள் கமிட்டியும் (PEOPLE'S COMMITTEE FOR SAFE ENERGY - PECOSE) பிரேக்துரு சயின்ஸ் சொசைட்டியும் (BREAKTHROUGH SCIENCE SOCIETY - BSS) இணைந்து நடத்தின. நாட்டில் நிலவும் மின்பற்றாக்குறை பற்றியும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்றைய நிலவரத்தில் அணுசக்தி உட்பட நடைமுறையில் சாத்தியமான பல்வேறு தீர்வுகள் குறித்தும் சுதந்திரமான திறந்த விவாதம் நடைபெறுவதை ஏதுவாக்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும். குறிப்பாக கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்த்து தளராமல் நடந்து வரும் மக்கள் இயக்கத்தின் பின்னணியிலும் மஹாராஷ்டிராவின் ஜெய்த்தாபூரிலும் ஆந்திராவின் கொவாடாவிலும் குஜராத்தின் மித்தி வத்தியிலும் அணுமின் நிலையங்கள் நிறுவுவதற்கு எழுந்துவரும் மக்கள் எதிர்ப்பின் பின்னணியிலும் இம்மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.






**மேடையில் :** S **காந்தி, திரு சங்கர் சர்மா,** Dr **சுமித்ரோ பானர்ஜி,** Prof **துருபா முகர்ஜி, திரு** M G **தேவசகாயம்,** Dr A **கோபாலகிருஷ்ணன் பங்கேற்றோரில் ஒரு பகுதியினர்**

மாநாட்டிற்கு முன்னதாக, பிரசித்திபெற்ற உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி ஆர் கிருஷ்ணய்யர், அணுசக்தி முறைமை வாரிய (AERB) முன்னாள் சேர்மன் டாக்டர் ஏ கோபாலகிருஷ்ணன், ஹரியானா மாநில மின் வாரியத்தின் முன்னாள் சேர்மன் எம் ஜி தேவசகாயம் ஐ ஏ எஸ், எரிசக்தி கொள்கை ஆய்வாளர் திரு சங்கர் சர்மா, அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இயற்பியலாளர் டாக்டர் எம் வி ரமணா, கர்நாடக ராஷ்டிரிய விஞ்யான் பாஷத் (KRVP)தின் ஸ்தாபகரும் அறிவியல் எழுத்தாளருமான பேராசிரியர் ஜெ ஆர் லட்சுமண் ராவ், சென்னையைச் சேர்ந்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான திரு நித்யானந்த் ஜெயராமன், கர்நாடகாவின் பிரசித்திபெற்ற அறிவியல் எழுத்தாளர் ஏ கிருஷ்ணா பட், கல்கத்தாவின் சாஹா இன்ஸ்டிடியூட் ஆஃப் நியூக்ளியர் பிசிக்ஸ் பேராசியர் அபி கே தத்தா மஜூம்தார், இன்ஸ்டிடியூட் பார் சோசியல் அன்ட் எகனாமிக் சேஞ்ன் டாக்டர் பதிபந்லா ஸ்ரீகாந்த், சமூக சேவகரும் பத்திரிகையாளருமான பிரகாஷ்பாய் என் ஷா, சுதந்திர போராட்ட வீரரும் சர்வோதயா சேவகருமான ஜகதிஸ் ஷா, பி யு சி எல் (PUCL) குஜராத் பொதுச்செயலாளர் கௌதம் தாக்கர், ஆவணப் படத்தயாரிப்பாளர் திரு மிஸ்ட்ரை, குஜராத் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் தினேஷ் சுக்லா, சமூக சேவகரும் பத்திரிகையாளருமான கபில்பாய்ஷா தனுஷ்ஸ்ரீ சங்கோபாத்தியாயா, சமூக சேவகர்கள் திலிப் சாந்துலா மற்றும் ஹிம்மத் ஷா ஆகியோர் கையொப்பமிட்ட அறைகூவல் கடிதத்தைக் கொண்டு மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது.

மாநாட்டிற்கு வந்திருந்த சிறப்புமிக்க பேச்சாளர்களையும் பிரதிநிதிகளையும் டாக்டர் உமாராமச்சந்திரன் பிரேக்துரு சயின்ஸ் சொசைட்டி, தமிழ்நாடு வரவேற்றார். இம்மாநாட்டிற்கு கல்கத்தா பல்கலைக்கழக ஓய்வுபெற்ற நிலவியல் பேராசிரியர் டாக்டர் துருபா முகர்ஜி தலைமை தாங்கினார். நாட்டின் எரிசக்தி ஆதாரங்கள், அவற்றின் பாதிப்புகள் மற்றும் செலவுகள் குறித்து முழுமையான கணித்தலை அடிப்படையாக கொண்ட நமது எதிர்கால எரிசக்தி கொள்கையை வடிப்பதற்கு ஒரு வழிகாட்டுதலை உருவாக்க இந்த மாநாடு முயற்சிக்க வேண்டும் என தனது தலைமை உரையில் அவர் கேட்டுக்கொண்டார். மின்சக்திப் பற்றாக்குறையை போக்க அணுசக்தி தவிர்க்கயியலாதது என்றும் அது மலிவானதும் பாதுகாப்பானதும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததும் என அணுசக்தி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். அணுக்கதிர் வீச்சின் நீண்டகால பாதிப்பு, அணுக்கழிவின் பாதிப்பு, பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தாலும் அணுஉலை விபத்து பேரழிவின் சாத்தியம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி எதிர்கருத்து கொண்டவர்கள் வாதிடுகிறார்கள். நாட்டின் மின்பற்றாக்குறையைப் போக்க அணுசக்தி தேவையா, போதிய அளவு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

அணுசக்தி முறைமை ஆணையத்தின் (Atomic Energy Regulatory Board - AERB) முன்னாள் சேர்மன் டாக்டர் ஏ கோபாலகிருஷ்ணன் தனது ஆழமான உரையில், இந்திய அணுசக்தித் திட்டம் தறிகெட்ட பாதையில் துரிதமாக வழிநடத்தப்படுகின்றது என்றும் இந்தத் துறையில் தன்னிறைவை எட்டும் விஞ்ஞானி பாபாவின் சுயசார்பு திட்டம் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டது என்றும் சுட்டிக்காட்டினார். இந்தியாவில் அணுக் கொள்கை வகுப்பதில் கார்ப்பொரேட் நலன்களே கோலோச்சுகின்றன என்றும் தற்போது நிலவும் அரசாங்க கார்ப்பொரேட் அரசியல்வாதிகளின் கூட்டு உடைத்தெறியப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார். கூடங்குளத்தில் கட்டப்படும் ரஷ்ய அணுஉலையின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த சந்தேகங்களை அவர் வெளிப்படுத்தினார்.

உலையை நிறுவும் பணிகளை முழுமைபெறச் செய்வதற்காக (கமிஷனிங்) நடத்தப்பட்ட வெப்ப ஓட்ட சோதனையின் போது (Hot Testing) முக்கிய பாகங்களின் கோளாறுகள் சரிசெய்யப்படவில்லை என்று கடந்த சிலவாரங்களாகத் தெரிகிறது என்றும் ரஷ்யா வழங்கிய அணுஉலையின் பாகங்களின் தரம் குறித்து கவலையெழுப்பும் செய்திகள் வெளிநாட்டிலிருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கூடங்குளம் மாதிரியான வி வி ஆர் (VVER) அணுஉலைகளுக்கு மலிவான பாகங்களை வழங்கியது, ஏமாற்று மற்றும் ஊழல் புகார்களில் ரஷ்ய பொதுத்துறை நிறுவனமான ரோஸாட்டம் (Rosatom)ன் துணை நிறுவனமான ஜியோ போடோல்ஸ்க் இயக்குநர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற விவரத்தை டாக்டர் கோபாலகிருஷ்ணன் கவனத்திற்கு கொண்டுவந்தார். அம்மாதிரியான அணுஉலைகளில் இரண்டு கூடங்குளத்தில் நிறுவப்பட்டுள்ளது. பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு போராடும் அம்மக்கள் காட்டும் எதிர்ப்பு முழுக்க முழுக்க நியாயமானவையே என்றார் அவர்.

எரிசக்தி கொள்கை ஆய்வாளர் திரு சங்கர் சர்மா உரையாற்றும் போது இந்திய எரிசக்தித் துறையில் முடிவுகளை எடுப்பதற்கானகருவியாக விலை பலன் ஆய்வைப் பயன்படுத்தவேண்டும் என்றார். நமது சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலன் என்ற கண்ணோட்டத்திலிருந்து சரியான தீர்வை எட்ட இந்த அணுகுமுறைதான் உதவியாக இருக்கும் என அவர் வலியுறுத்தினார்.

பவர் இஞ்ஜினியர்ஸ் சொசைட்டி ஆஃப் தமிழ்நாடு (PESOT)ன் தலைவர் திரு எஸ் காந்தி அவர்கள், அரசாங்கத்தின் போதுமான உற்பத்தி திறன் இல்லாததே இன்றைய மின் பற்றாக்குறைக்கு காரணம் என விளக்கினார். சமீபத்தில் மின் கொள்கையில் மாற்றங்கள் புகுத்தப்பட்ட போது பொதுத்துறையில் புதிய உற்பத்தி நிலையங்களுக்கு இந்திய அரசாங்கம் அனுமதி மறுத்ததோடு தனியார் உற்பத்தியாளர்களை வரவேற்கும் வகையில் கட்டாயப்படுத்தியும் அதற்கேற்ப சட்டத்தைத் திருத்தியும் மாற்றங்கள் செய்தனர். மின்சாரம் தற்போது மிகக் கடுமையான விலையில் தனியாரிடமிருந்து வாங்கப்படுகிறது என்றார்.

இந்தியாவின் மின்சக்திப் பிரச்சினைக்கு விவேகமுள்ள மேலாண்மைக் கொள்கை (Prudential Management Paradigm) தேவை என்று ஹரியானாவின் முன்னாள் மின்வாரிய சேர்மனும் ஓய்வு பெற்ற ஐ ஏ எஸ் அதிகாரியுமான திரு எம் ஜி தேவசகாயம் விளக்கினார். இது இல்லாததால் நிலக்கரித்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் தனியார்மயம் புரையோடி மின்சக்தித் துறையும் சரிந்துவிழ காரணமாகியது என்றார். ஆக, விவேகமுள்ள மேலாண்மையும் முழுமையான பரிசீலனையும் செய்யாமல் மின்சக்தித்துறை இருட்டில் இருந்து வெளிவரமுடியாது என்ற சாராம்சத்துடன் தனது உரையை முடித்தார்.

கல்கத்தாவின் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் எஜுகேசன் மற்றும் ரிசர்ச் (IISER) பேராசிரியரும் டீன் ஆஃப் ஸ்டூடன்ஸ்ம் ஆன டாக்டர் சுமித்ரோ பானர்ஜி, அணுசக்தியின் பாதிப்புகள் மற்றும் எரிசக்திகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். சுரங்கத்தில் யுரேனியத்தைத் தோண்டி எடுப்பது முதல் அணுக்கழிவுகளை இறுதியாக அழிப்பது வரை அணுமின் உற்பத்தியில் இருக்கும் ஆபத்துக்கள் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து அவர் தெளிவாக எடுத்துரைத்தார். அணுமின் உற்பத்தியின் விலையைப்பற்றி குறிப்பிடும்போது அது அதிக விலை கொண்டது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

புகழ்பெற்ற நீதிபதி வி ஆர் கிருஷ்ணய்யர், இந்திய அரசாங்கத்தின் முன்னாள் எரிசக்தி செயலாளரும் திட்டக் கமிஷனின் முன்னாள் எரிசக்தி ஆலோசகருமான டாக்டர் ஈ ஏ எஸ் சர்மா, மேஜர் ஜெனரல் (ஓய்வு) எஸ் ஜி ஓம்பட்கரே, பம்பாய் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுரேஷ் ஹோஸ்பெட், ஜாதவ்பூர் பல்கலைக்கழக எரிசக்தித் துறை (School of Studies) தலைவர் பேராசிரியர் சுஜய் போஸ் மற்றும் மேற்கு வங்கத்தின் ஹரிப்பூரின் அணுசக்தி திட்ட எதிர்ப்பாளர்கள் ஆகியோர் அனுப்பிய மாநாட்டுச் செய்திகள் மாநாட்டில் வாசிக்கப்பட்டன. 'அனைத்து அணுசக்தி திட்டங்களும் உடனடியாகக் கைவிடப்படவேண்டும், மக்களின் அனைத்து நியாயமான அச்சங்களும் போக்கப்பட்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், தங்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்புடைய கொள்கை முடிவுகள் எடுப்பதில் மக்களின் பங்கெடுப்பை உறுதிசெய்ய வேண்டும்' என மிகவும் உணர்வெழுச்சியுடன் நீதிபதி வி ஆர் கிருஷ்ணய்யர் தனது செய்தியில் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்த கேள்வி பதில் அமர்வில், மாநாட்டில் பங்குபெற்றோர் பேச்சாளர்கள் ஒவ்வொரிடமும் கேள்விகளைத் தொடுத்தனர். பல்வேறு பேச்சாளர்களும் நாட்டின் சிக்கலான மின்சக்திப் பிரச்சினையில் தெளிவான கருத்தை அடையும் விதத்தில் பதிலளித்தனர்.

அணுஉலைத் திட்டங்கள் போடப்பட்டுள்ள குஜராத்தின் மித்தி வத்தியிலிருந்தும் ஆந்திராவின் கொவாடாவிலிருந்தும் வந்திருந்தவர்கள் தங்களின் போராட்ட வரலாற்றை உருக்கமாக எடுத்துரைத்தனர்.

மாநாட்டின் நிறைவாக, அணுசக்தியின் எரிபொருள் சுழற்சி முழுமைக்கும் நிலவும் பல்வேறு ஆபத்துக்களினால் இன்று நம் நாட்டிற்கு அணுசக்தி பொருத்தமானது அல்ல என்றும் சூரிய சக்தி காற்றாலை உட்பட புதுப்பிக்கயியன்ற மற்றும் நீடித்து நிலைக்கும் ஆதாரங்களின் மீது அதிகமாக சார்ந்திருக்க வேண்டும் என்றும் சம்மந்தப்பட்ட மக்களை கலந்தாலோசித்துத் தான் அனைத்து கொள்கை முடிவுகளையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற சாராம்சங்களைக் கொண்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் நலன்களை என்றுமே மனதில் கொண்டு நாட்டின் மின் உற்பத்தி பிரச்சினையில் கைக்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்க நாடு முழுவதும் இனி நடத்தப்படும் விவாதங்கள் தொடரின் முதல் நிகழ்ச்சி இதுவாக இருக்கட்டும் என்ற அறைகூவலுடன் பேராசிரியர் துருபா முகர்ஜி இந்த ஒருநாள் மாநாட்டை முடித்து வைத்தார்.

## தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா

# அறிவிக்கப்பட்ட உணவு அளவு மனிதனுக்கு தேவையான குறைந்தபட்ச கலோரியைவிட மிகக் குறைவாகும்

2ம் பக்கம் தொடர்ச்சி

அரசாங்கம் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை தருகின்றன.

இந்திய மக்களில் 78 சதவிகித்தினர் நாளொன்றுக்கு ரூ.20க்கும் மேலாக செலவு செய்ய இயலவில்லை என்றும் இவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாக கருதப்படவேண்டும் என்றும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட அர்ஜுன் சென் குப்தா தலைமையிலான கமிட்டி தெரிவித்தது. ஆனால் திட்டக்கமிஷன் கிராமப்புறங்களில் ரூ.15க்கும் குறைவாகவும் நகர்ப்புறங்களில் ரூ.20க்கும் குறைவாகவும் செலவிடுவோர்தான் ஏழைகள் என வறுமைக் கோட்டை மறு நிர்ணயம் செய்தது. இதன் மூலம் நாட்டின் ஏழைகளின் எண்ணிக்கையை 40 கோடியாக குறைத்துவிட்டது. இது ஏறக்குறைய 33 சதவிகித மக்கள்தொகையாகும். இவ்வாறாக 78 சதவிகித மக்கள் ஏழைகள் என்று அர்ஜுன் சென்குப்தா கூறியதை திட்டக்கமிஷன் பாதிக்கும் குறைவாக குறைத்துவிட்டது.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோர் 56 சதவிகித மக்கள் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கையில் இம்மசோதா இதை கிராமப்புற மக்களில் 46 சதவிகிதத்தினர் என்றும் நகர்ப்புற மக்களில் 28 சதவிகிதத்தினர் என்றும் குறைத்துவிட்டது. அதாவது அனைத்து கிராமப்புற நகர்ப்புற ஏழை மக்களும் இம்மசோதாவின் கீழ் பயன்பெறப்போவதில்லை என்று அரசாங்கத்தின் புள்ளிவிவரமே தெரிவிக்கிறது. ஆயினும் நாடெங்கிலும் விமர்சனங்கள் எழுந்ததையடுத்து முன்னுரிமை மற்றும் பொதுக்குடும்பங்களின் அனைத்து பிரிவினரும் திருத்தப்பட்ட மசோதாவில் தகுதிவாய்ந்த குடும்பங்கள் என இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திருத்தங்களுக்குப்பிறகு கிராமப்புற மக்களில் 75 சதவிகிதத்தினரும் நகர்ப்புற மக்களின் 50 சதவிகிதத்தினரும் இலக்காக கொள்ளப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவர் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் உண்மை யாதெனில்:

1. இத்திட்டத்தின் கீழ் எத்தகைய மக்கள் பயன்பெறுவர் என்பதையும் அவர்களை அடையாளம் காணும் வழிமுறைகளையும் இம்மசோதா தெளிவாக வரையறுக்கவில்லை.

2. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக இருக்கப் போகும் ஏழைகளிலும் ஏழைகள் மக்கள் தொகையில் மிகப்பெரும்பாலானவர்களாக விளங்குவதோடு (குறைந்தது கிராமப்புறத்தின் 75 சதவிகிதத்தினர் மற்றும் நகர்ப்புறத்தின் 50 சதகிவிகிதத்தினர்) சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளுக்கும் அதிகமாகிவிட்ட போதிலும் தங்களது வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்வது ஒருபுறமிருக்க வாழ்வின் அடிப்படை தேவைகளைக்கூட அதிலும் அதிமோசமாக உணவுத் தேவைகளைக்கூட தாங்களாகவே நிறைவேற்றிக் கொள்ள வழிவகையின்றி நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மனித நிலைக்கும் தாழ்வான இழிநிலைக்கு இம்மக்கள் எவ்வாறு தள்ளப்பட்டார்கள் என்ற கேள்வி எழுகிறது.

3. எனவே இம்மக்கள் கண்ணியத்தோடு வாழ்வதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் இரக்கமுள்ள தேவதூதனாக வரவேண்டியுள்ளது. இப்போதாவது உதவ முன்வந்ததே நம் அரசாங்கம்! ஆனால் இப்பிரச்சினையை அரசாங்கம் அணுகுகின்ற விதமானது நம்முள் சந்தேகத்தை கிளறுகிறது. அதாவது ஏழைகளை கண்டறிவதற்கு அவர்கள் பல விதமான வார்த்தைகளை பிரயோகிப்பது குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும் அதன் மூலம் தனது பொறுப்பை நிறைவேற்றாமல் தட்டிக்கழித்து தப்பிப்பதற்கும் அரசாங்கம் கையாளும் சூழ்ச்சியோ என எண்ணத்தோன்றுகிறது.

நாட்டு மக்களில் யாரேனும் பட்டினியாக வாழ்கிறார்களா என்ன என்று சந்தேகமாக அரசாங்கம் கேட்பதாகத்தெரிகிறது. ஆனால் சுட்டெரிக்கும் உண்மை யாதெனில் நாடெங்கிலும் பட்டினிகள் மட்டுமல்ல பட்டினிச்சாவுகள்கூட ஏராளமாக உள்ளன என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள் குழந்தைகளின் உணவுத்தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்கு அவர்கள் அராசங்கத்தின் பரோபகாரத்தை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ள மக்களை கொண்ட வல்லரசாகத்துடிக்கும் நாடு எந்த அளவிற்கு நாகரீகமான நாடாக இருக்க முடியும்? உணவுத்தேவையை பூர்த்தி செய்துகொள்வதென்பது அவர்களின் பிறப்புரிமை அல்லவா? அவர்களின் தற்போதைய வாழ்நிலை கௌரவக்குறைவாக இருக்கிறதென்றால் இந்த நிலைக்கு அவர்களை தள்ளியது யார்? எதற்காக தள்ளினார்கள்? தங்கள் பரோபகாரத்தை இந்த நிர்க்கதியான மக்களிடம் அவ்வப்போது காட்டிக்கொண்டு அதன் மூலம் அவர்களின் ஆதரவைப்பெற்று பதவியையும் அதிகாரத்தையும் மட்டுமே நோக்கமாக கொண்டு அரசியல் நடத்தும் அரசியல் கட்சிகளை ஆட்சிக்கட்டிலில் அமர்த்துவதற்காக இம்மக்களை வாக்குவங்கிகளாக பயன்படுத்திக் கொள்வதற்காக இம்மக்களை கையேந்திகளாகவே வைத்திருப்பவர்கள் யார்? தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதாவும் இதே அணுகுமுறையை கொண்டிருக்குமானால் இத்திட்டத்தின் மூலம் இம்மக்களுக்கு போடப்போகும் எலும்புத்துண்டுகளால் அவர்கள் கௌரவமான வாழ்வை எட்டப்போவதில்லை: அவர்களது அடிப்படைத்தேவைகளும் பூர்த்தியடையப்போவதில்லை.

மக்கள் நலன் என்ற அணுகுமுறையிலிருந்து உரிமை அடிப்படையிலான அணுகுமுறைக்கு இந்த தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதாவில் மாற்றம் கொண்டு வரப்போவதாக அரசாங்கம் முன்மொழிகிறது. தங்கள் வாழ்வின் பிற துறைகளில் ஏற்பட்ட அனுபவங்கள் மக்களுக்கு எதை உணர்த்தியிருக்கின்றன? பெரிய பெரிய வார்த்தைகளை வெளியே பகட்டாக கூறிக் கொண்டு திரைமறைவில் தனது பொறுப்புகளை எப்படியெல்லாம் அரசாங்கம் தட்டிக்கழித்து அப்பொறுப்பை மக்கள் தலையிலேயே போட்டுள்ளது என்பதை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு கல்வி பெறும் உரிமையை எடுத்துக் கொண்டால் மாவட்ட தொடக்கக்கல்வித்திட்டம், சர்வ சிக்ஷா அபியான், கல்வி பெறும் உரிமை சட்டம் போன்ற திட்டங்கள், சட்டங்களின் மூலம் இந்நாட்டு குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதற்கான கடமையை அரசாங்கம் தன் பொறுப்பிலிருந்து இறக்கிவிட்டு பெற்றோர்கள் பாதுகாவலர்களின் தலையில் சுமத்திவிட்டது. அதேபோல் இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை அடிப்படையிலான அணுகுமுறை என்பதும் வெறும் வார்த்தை ஜாலம்தான் என்பதையும் மக்களை ஏமாற்றுவதற்கான மோசடி வார்த்தைகளே என்பதையும் ஒருவர் எப்போதும் மறக்கலாகாது. இதில் குறிப்பிடப்படும் உரிமை அரசியல் அமைப்பு சட்ட ரீதியாக நிலைநாட்டக்கூடிய உரிமையோ அல்லது நியாயப்படுத்தக் கூடிய உரிமையோ அல்ல. இந்தத் திட்டம் அதன் இலக்கை எய்துவதற்கு அதற்கு உகந்த சூழ்நிலையை அரசாங்கம் வெற்றிகரமாக உருவாக்கி அதன் செம்மையான அமலாக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் நல அணுகுமுறையிலிருந்து உரிமை அடிப்படையிலான அணுகுமுறைக்கு மாறுவதாக இந்த மசோதாவில் மிக சிரத்தையோடு அரசாங்கம் தெரிவித்திருப்பதால் உணவைப்பெறுவதற்கான உரிமையும் கல்வி பெறும் உரிமை அடைந்துள்ள அதே கதியை அடைந்துவிடுமோ என்ற கிலேசத்தை நம்முள் ஏற்படுத்துகிறது. மக்களுக்கு உணவை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை கைகழுவுவதற்காக அரசாங்கத்திற்கு சாக்காக அமைந்துவிடுமோ என்ற கேள்வியும் எழுகிறது.

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன:

### ஆட்டங்காணும் அடித்தளத்தில் நிற்கும் இம்மசோதா சக்திவாய்ந்த உணவுப்பொருள் வர்த்தகர்களுக்கு சாதகமாக விளங்குகிறது

இலக்கிடப்பட்ட மக்களான ஏழைகளிலும் ஏழைகளுக்கு மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு 7 கி கி உணவு தானியம் என அரசாங்கம் அளவு நிர்ணயம் செய்கிறது. அதாவது ஒரு சராசரி மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு அவனுக்கு எவ்வளவு உணவுப்பொருள் வேண்டுமோ அந்த அளவிற்கு வழங்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் கைகழுவிவிட்டது என்பதையே இது காட்டுகிறது. ஒருவருக்கு தேவையான அளவிற்கு உணவுப்பொருள் வழங்காமல் அரசாங்கத்தால் உற்பத்தியாளர்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்ய முடியும் எந்த அளவிற்கு கொள்முதல் செய்வது சாத்தியமாகவும் தனக்கு சௌகரியமாகவும் இருக்கும் என்று யோசிக்கிறது. எனவே மக்களுக்கு வழங்கக் கூடிய உணவுப்பொருளின் அளவு மூன்று அம்சங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. அவை யாவன: களத்தில் விளைச்சலின் அளவு, அரசாங்கம் கொள்முதல் செய்யும் அளவு, இம்மசோதாவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தகுதியான அடிப்படையில் தேவையான உணவுப்பொருட்களின் அளவு ஆகியவையாகும்.

சமீப காலங்களில் மொத்த உணவுதானிய உற்பத்தியில் சராசரியாக 30 சதவிகிதத்தை அரசாங்கம் கொள்முதல் செய்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு ஒரு கட்டத்தில் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிட்டதாக கூறிக்கொள்வதில் அரசாங்கம் மும்முரமாக இருந்தது. கடந்த நூற்றாண்டின் எழுபதுகளில் கிராமப்புற பொருளாதாரத்தில் வளர்ச்சியும் கிராமப்புற கூலி அதிகரிப்பும் கிராமப்புற வறுமையில் வீழ்ச்சியும் ஏற்பட்டதையடுத்து உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவை ஒத்ததொரு சூழல் உருவாயிற்று. ஆனால் 1990 முதல் இந்திய விவசாய வளர்ச்சி அச்சமூட்டும் அளவிற்கு குறைந்துவிட்டது. (2009ல் நாட்டின் பிரதமரே ஊடகங்களிடம் இதை ஒப்புக்கொண்டுள்ளார்). அதோடு கிராமப்புற வறுமையும் வேகமாக அதிகரிக்கத் துவங்கிற்று. நாட்டின் சில மாநிலங்கள் மிகமிகக் குறைவான வளர்ச்சியையே பதிவு செய்தன. சில மாநிலங்கள் எதிர்மறை வளர்ச்சியைக்கூட அதாவது வீழ்ச்சியை பதிவு செய்தன. வறட்சியும் மோசமான பருவமழையும் இந்த குறைவான வளர்ச்சிக்கு முக்கியமான காரணமென மத்திய–மாநில அரசாங்கங்கள் கூறின. ஆனால் இக்காலங்களில் அரசாங்கங்கள் விவசாய மேல்கட்டுமானத்திற்காக மிகக்குறைவாகவே செலவழித்தன. ஆனால் அதே சமயம் மானியத்திற்காக அதிகமாக நிதி ஒதுக்கின. இந்த மானியம் ஒரு சில பணக்கார விவசாயிகளுக்கும் அவர்களது சக்திவாய்ந்த குழுக்களுக்குமே சென்றது. பலமிக்கவர்களின் பாக்கெட்டுகளுக்கு மானியம் செல்லும் போக்குகள் சம்பந்தப்பட்ட அரசாங்க பதிவேடுகளிலும் உலக வங்கி அறிக்கைகளிலும் ஏராளமாக இடம்பெற்றுள்ளன.

இதுபோக, ஒரு விஷமத்தனமான பிரசாரமும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. அது யாதெனில் இன்றைய உலகமயக்காலக்கட்டத்தில் உணவு என்பது பூகோள சந்தையின் சரக்காகி சந்தையில் பிரதான விசையாகிவிட்ட நிலையில் உணவுப் பாதுகாப்பு என்பது தன்னிறைவை அடைவதாகாது என்பதேயாகும். ஆகவே விவசாய வளர்ச்சியில் மந்தநிலை இருந்தபோதிலும் சில உணவுதானிய உற்பத்தியில் இந்தியா சாதனை புரியும் (உதாரணத்திற்கு கடந்த ஆண்டு 94.88 மில்லியன் டன்கள் கோதுமை உற்பத்தி செய்து சாதனை படைக்கப்பட்டது. இந்த ஆண்டு இது அதைக்காட்டிலும் அதிகமாகக்கூடும்.) உள்நாட்டில் தேவைகளும் டிமாண்டும் இருந்தாலும்கூட உணவுதானிய உற்பத்தி பெருச்சாளிகளும் சுறாக்களும் உற்பத்தியானவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொள்ளை லாபம் ஈட்டுவர். (கடந்த ஆண்டு 9.5 மில்லியன் டன்கள் அரிசி ஏற்றுமதி செய்து அரிசி ஏற்றுமதியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது). இந்த ஏற்றுமதிக்கு பதிலாக எந்தக் காலத்திலும் போதுமான அளவிற்கு தன்னால் உற்பத்தி செய்ய முடியாத இயந்திரங்கள் உதவியோடு அறுவடை செய்வதற்கு ஏற்ற யு எஸ் கனடா போன்ற நாடுகளின் புன்செய் நிலத்தில் உற்பத்தியாகும் தானியங்களை பதிலுக்கு இறக்குமதி செய்கிறது. ஆகவே உண்மைகள் யாதெனில்:

1. உணவுதானிய உற்பத்தியில் தன்னிறைவு என்ற கட்டுக்கதை தகர்ந்துவிட்டது.
2. நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு உணவுதானிய உற்பத்தி இருக்கப்போவதில்லை மாறாக உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளிலிருந்து லாபம் ஈட்டுவதையே நோக்கமாகக்கொண்டிருக்கப் போகிறது.
3. இதை நோக்கமாகக் கொண்டிருக்கும் வேளையில் ஏதோ ஒரு உணவுப்பொருளின் உற்பத்தி சாதனை அளவை எட்டக்கூடும். அப்படியிருப்பினும் விவசாய வளர்ச்சி மிகக்கடுமையான வீழ்ச்சியை அடையும்..
4. இத்தகைய சூழ்நிலையில் திட்டமிடலும் அதன் செயலாக்கமும் விளைநிலத்திலோ சந்தையிலோ பெருமுதலைகளாக பெருஞ்சுறாக்களாக விளங்கும் சக்திவாய்ந்த நிலச்சுவான்தார்கள் மற்றும் பெரு வியாபாரிகளுக்கே உதவும்.
5. பணக்காரர்களுக்கு சாதகமாகவும் ஏழைகளுக்கு பாதகமாகவும் விளங்கும் அராஜகத்தனமாகவும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா

# பொது விநியோகத் திட்டத்தில் நடைபெறும் ஊழல் குறித்து வாய்திறக்கவில்லை

4ம் பக்கம் தொடர்ச்சி

வீழ்ச்சியடைந்தும் வருகின்ற விவசாய உற்பத்தியில் 30 சதவிகிதத்தைக்கொண்டு தனது பிரஜைகளுக்கு உணவூட்ட அரசாங்கம் நினைக்கிறது.

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன:

சாத்தியத்தன்மை என்றும் தன்னால் இயலக் கூடியது என்றும் கூறுவது தேவையைக் காட்டிலும் மிகக்குறைவான அளவை குறிக்கிறது

உற்பத்தியை பற்றி இதுவரை கண்டோம். தொய்வுற்று வரும் வேளாண் வளர்ச்சி விகிதத்தை ஏறுமுகமாக மாற்றுவது எப்படி என்பதைப்பற்றி இந்த மசோதா ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. மாறாக நிலைக் குழு அம்பலப்படுத்தியது போல் தொய்வுற்றுவரும் வேளாண் உற்பத்தியில் 30 சதவிகிதத்தை கொள்முதல் செய்து தன் நாட்டு மக்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய அரசாங்கம் திட்டமிடுகிறது. மீதமுள்ள 70 சதவிகிதம் உணவுப்பொருள் உற்பத்தி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெருமுதலைகள் கொள்ளை லாபம் ஈட்டுவதற்காக விட்டுவைக்கப்படும். ஆனால் தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்துக்கான தேவையோ இந்த 30 சதவிகிதத்தைக்காட்டிலும் அதிகம். ஆகிவேதான் இயலக்கூடியதும் சமாளிக்கக்கூடியதுமான அளவு என்று அனைவருக்கும் 5 கி கி தானியம் வழங்கலாம் என்று நாடாளுமன்ற நிலைக்குழுகூட பரிந்துரைத்துள்ளது போலும்! கொள்முதல் அளவையும் தேவைப் படும் அளவையும் சமநிலைப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையையும் இம்மசோதா முன்மொழிய வில்லை. மாறாக நிலைக்குழு தெரிவித்த சமாளிக்கக் கூடியதும் இயலக்கூடியதுமானது என்ற வரையரையின்படி செயல்படுகிறது. மக்களுக்கு எந்த அளவிற்கு எந்த வகையில் உணவுப்பாதுகாப்பு அரசாங்கம் வழங்கும் என்பதை இதிலிருந்து நன்கு ஊகிக்கலாம். ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவிற்கான உணவை ஏழைகளுக்கு இம்மசோதா உத்தரவாதப்படுத்துகிறது என்று ஒருவர் வாதிடலாம். ஆகவே, வழங்கப்படும் இந்த ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவு உணவுப்பொருட்கள் ஏழைகளின் உணவிற்கு எந்த அளவிற்கு ஆதாரமாக விளங்கும் என்பதை இனி காணலாம்.

இது தொடர்பாக ஏற்கனவே இக்கட்டுரையில் குறிப் பிடப்பட்ட புள்ளிவிவரங்களை மறுமுறை கூற வேண்டியது அவசியமாகிறது. இலகுவான, நடுத்தர மாக, பளுவான வேலை செய்யும் சராசரி மனிதனுக்கு நாளொன்றுக்கு முறையே 2300, 2800, 3500 கலோரிகள் தேவைப்படுகின்றன. இதே போல் இலகுவான நடுத்தர மான பளுவான வேலை செய்யும் பெண்மணிக்கு முறையே 1800, 2250, 2700 கலோரிகள் தேவைப்படு கின்றன. 7 கி கி கோதுமை ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு வழங்கப்படுமானால் ஒரு நாளுக்கு சுமார் 230 கிராம் கிடைக்கும். இது ஏறக்குறைய 750 கலோரிகளைத் தரும். இதே அளவுள்ள அரிசி 250 கலோரிகள் தரும். எந்த வகையில் கணக்கிட்டாலும் இந்த அளவுகள் தேவையை நெருங்கவாவது முடியுமா? இந்த அளவை 7கிலோவிலிருந்து மேலும் குறைத்து 5 கி கி என்ற அளவில் விநியோகித்தால் அதிலிருந்து எந்த அளவிற்கு கலோரிகளை பெறமுடியும். எனவே இம்மசோதா முன்மொழிகின்ற அளவிலான உணவு தானியங்கள் இலகுவான வேலை செய்யும் நபரின் கலோரி தேவைகளைக்கூட பூர்த்தி செய்யாது. வேலை செய்வதற்காக உடலுக்குத்தேவைப்படும் எரிசக்திக்காகத்தான் மனிதன் உணவை உட்கொள்கிறான். ஆனால் மனிதத் தேவையை அடிப்படையாக கொள்ளாமல் அரசாங்கத் தால் சமாளிக்கக்கூடிய இயலக்கூடிய அளவுதான் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்படக்கூடிய உணவுப் பொருட்களின் அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத பிற ஊட்டச்சத்துக்களான புரோட்டீன் தாதுச்சத்துக்கள் இதர நுண்ணூட்டச்சத்துக்கள் வழங்குவது என்ற பேச்சே இம்மசோதவில் எங்குமே எழவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் இந்த மசோதாவிற்கு வழங்கப்பட்டுள்ள பெயரான உணவுப் பாதுகாப்பு மசோதா என்ற பெயர் எந்த அளவிற்கு பொருத்த மானதாக இருக்கும் என்பதை வாசகர்களின் முடி விற்கே விட்டுவிடுகிறோம். குறைந்தபட்சம் பிராணனை நீட்டித்துக்கொண்டிருப்பதற்கு தேவையான உணவைக் காட்டிலும் மிகக்குறைந்த அளவில் உணவை வழங்கி விட்டு உணவுப் பாதுகாப்பை மக்களுக்கு உத்தர வாதம் செய்துவிட்டதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இந்திய ஆட்சியாளர்கள் எந்த அளவிற்கு தரந்தாழ்ந்தவர்களாகவும் கொடூரமானவர்களாகவும் இருப்பர் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். நிர்க்கதியான ஏழைமக்களை கவர்ந்து அவர்களது ஓட்டுக்களை பெறுவதற்காக பரோபகாரமாக காட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் நடத்தும் நாடகமேயன்றி இது வேறல்ல. அதே சமயம் தங்களது நிர்க்கதியான நிலைக்கு இந்த அரசாங்கங்களும் ஆளும் வர்க்கமுமே காரணம் என்பதை உணர்ந்து வாழ்வின் அடிப்படைத்தேவைகளுக்காக வீதிகளில் இறங்கி போராடுவதற்கு முன் வருவதை தடுப்பதற்காகவும் அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் செய்கின்ற சூழ்ச்சியாகும். தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தை அமல்படுத்துவதில் ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அதற்கு சேவைபுரியும் அரசாங்கங்களும் உண்மையிலேயே சிரத்தையோடு இருக்குமானால் முதலில் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கட்டும்.

1. மிக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்குகிறோம் என்ற பெயரில் சில எலும்புத்துண்டுகளை போடுவதன் மூலம் அவர்களை சபிக்கப்பட்ட வாழ்விற்குத் தள்ளி தங்கள் சொந்தக்காலில் என்றைக்குமே நிற்க முடியாத என்றென்றைக்கும் கையேந்தியே வாழ்கின்ற நிலைமைக்கு அவர்களை இந்த அரசாங்கம் தள்ளவில்லையா?

2. மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதனால் போதுமான அளவில் உணவுப்பொருள் உற்பத்தியை உத்தர வாதப்படுத்த வேண்டாமா?

3. தன்னுடைய சொந்த சம்பாத்தியத்திலிருந்து தனக்குத்தேவையான உணவையேனும் வாங்கிக் கொள்வதற்கேற்றவாறு ஏழைகளின் வாங்கும் சக்தி அதிகரிப்பதை இந்த அரசாங்கம் உத்தர வாதப்படுத்த வேண்டாமா?

4. இறுதியாகவும் முக்கியமானதுமாக உற்பத்தி கொள்முதல், விநியோகம் ஆகியவற்றில் தனியாரின் கைகள் ஓங்குவதற்கு இடம் கொடாதிருப்பதை உறுதி செய்யவேண்டாமா? இதற்காக இதர உணவுப்பொருட்களையும் இதர அத்தியா வசியப்பொருட்களையும் அரசே ஒட்டுமொத்த மாக கொள்முதல் செய்து விநியோகிப்பதை அறிமுகப்படுத்தி அவை ஒழுங்காக நடை பெறுவதை உறுதிப்படுத்த வேண்டாமா?

இல்லையெனில், வரியின் மூலம் திரட்டப்பட்ட மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை மக்களுக்கு சென்றடையாமல் பணக்கார ஊழல்வாதிகள் அறுவடை செய்யும் வண்ணம் ஒட்டுமொத்த செயல்முறையும் குறைக்கப் பட்டுவிடும்.

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன:

ஊழலின்பால் பாராமுகம் காட்டும் அரசாங்கம்

நிர்ணயிக்கப்பட்ட அளவிலான உணவுப் பொருட்கள் இலக்காக கொள்ளப்பட்ட பொது விநியோகத்திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும். பொது விநியோகத்திட்டம் பற்றி மக்களின் தற்போதைய அனுபவம் என்ன? ஒரு வாரத்திற்கும் மேலாக காத்திருந்த பின்னர் கையிருப்பு இல்லை என்ற உயிரற்ற வார்த்தைகள் எழுதப்பட்ட அறிவிப்புப்பலகையே ரேஷன் கடை கதவுகளில் அவர்கள் காண நேரிடுகிறது. எப்போதாவது அவர் களுக்கு உணவுப்பொருட்கள் கிடைத்ததென்றால் அவை மட்கிப்போய் மனிதர்கள் உண்பதற்கு தகுதி யற்றவையாக காணப்படுகின்றன. பொது விநி யோகத்திட்டத்தை சுற்றியும் உணவுப் பொருட்கள் வர்த்தகத்திலும் ஊழலெனும் கொள்ளைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்பதை செய்வதறியாது கண்கூடாக அவர்கள் காண்கிறார்கள். இந்த ஊழல் கொள்ளைக் கூட்டத்தில் நேர்மையற்ற இடைத்தரகர்கள், புரோக்கர்கள், பதுக்கல்காரர்கள், கள்ளச்சந்தையாளர்கள் ஆகியோர் ஊழலில் திளைக்கும் அரசாங்க அதிகாரிகள், அரசு குடோன்களில் பணிபுரிவோர், ஆளுங்கட்சி பிரமுகர்கள் மற்றும் இப்பிரமுகர்களின் கூட்டாளிகளாக விளங்கும் லோக்கல் டீலர்கள், நியாயவிலைக்கடை உரிமையாளர்கள், ரேஷன் கடை பணியாளர்கள், அவ்வப்பகுதியில் பேர்பெற்ற தாதாக்கள், குண்டர்கள் இன்னும் இதுபோன்றவர்களோடு கூட்டு சேர்ந்திருப்பவர்கள் என்பதை மக்கள் நன்கறிவர். விளைச்சல் நிலத்திலிருந்தே உற்பத்தி யாகும் பொருட்கள் மீது அவர்களின் ஆதிக்கம் துவங்கி விடுகிறது. தங்கள் இஷ்டம் போல் உற்பத்தியை கட்டுப் படுத்தி தங்களுக்கு ஆதாயமான வகையில் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் தானியங்களை கையாடல் செய்து அவற்றை மறுசுழற்சிசெய்தோ அல்லது பதப்படுத்தியோ வெளிச்சந்தையில் எக்கச்சக்க விலைக்கு விற்கிறார்கள்.

இதனால் ஏற்படும் பல்லடுக்கு விளைவுகள் அனைவரும் அறிந்ததே: மக்கள் போராட்டங்கள் கொடுத்த அழுத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொது விநியோகத்திட்டமானது சிதிலமடைந்து புரையோடிப்போன ஊழலில் சிக்கிவிட்டது. பொது விநியோக திட்டத்திலிருந்து வெளிச்சந்தைக்கு பெரும் பகுதி உணவுப்பொருட்களை திருப்பிவிடுவதற்கு உதவுகின்ற போலி ரேஷன் அட்டைகள் ஏராளமாக பெருகி விட்டன. உண்மையான பயனாளிகள், கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். குறைவாக கிடைப்பதை பற்றி கேள்வி கேட்க முடியாது. அளவிலேயே இந்த கதியென்றால் தரத்தை பற்றி சொல்லத் தேவையில்லை. தரக்குறைவான பொருட்களாயினும் மட்கிப்போய் மனிதர்கள் உண்பதற்கே தகுதியற்ற பொருட்களைக்கூட வாங்கிக்கொண்டு திருப்தியடைய வேண்டியதுதான். அரசாங்க குடோன்களில் நாற்ற மெடுக்கும் அளவிற்கு உணவுப்பொருட்கள் மட்கிப் போகின்றன. இத்திட்டத்தால் உண்மையிலேயே பயன்பெறுவோர் மேலே குறிப்பிட்ட கொள்ளைக் கூட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே. நாட்டின் கடைக்கோடி பகுதிகள் முதற்கொண்டு சாதாரண மக்களின் ஏழ்மையும் நிராதரவான நிலையும் கொடூரமாக வெளிப் படுகின்ற அதே சமயத்தில் இந்த கொள்ளைக்கூட்டம் லாபவேட்டை அபகரித்த செல்வத்தின் செழுமையும் பட்டோபகாரமாக தெரிகிறது. பரிதாபகரமான இந்த ஏழை மக்கள் தங்கள் தலைவிதியைத்தான் நொந்து கொள்கிறார்கள்.

இலக்காக கொள்ளப்பட்ட பொது விநியோகத் திட்டத்தில் (Targeted Distribution Public System - TDPS) சீர்திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி இம்மசோதா சில பக்கங்களில் விவரித்துள்ளது. செய்ய வேண்டியன எவை செய்யப்போவது எவற்றை என தெளிவாக பட்டியலிட்டுள்ளது. ஆனால் ஊழலைப்பற்றி ஒரு வார்த்தைகூட கிடையாது. மேலே குறிப்பிட்ட கொள்ளைக்கூட்டணியை பற்றி எங்கும் குறிப்பிடப் படாமல் கவனமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் ஊழல் புரியும் அதிகாரிகள் கொடூர குணங் கொண்ட கூட்டாளிகள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி எத்தகைய பொறுப்புணர்வும் வெளிப்படுத்தப் படவில்லை. ஊழலைக்களையாமலும் ஊழல் புரிபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலும் இந்த கொள்ளைக்கூட்டத் தையும் தாண்டி இந்த டி டி பி எஸ் திட்டம் இலக்காக கொள்ளப்பட்ட பயனாளிகளுக்கு பலன்களைத் தரும் என்று உண்மையிலேயே அரசாங்கம் கருதுகிறதா? இந்த கொள்ளைக்கூட்டத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தை சேர்ந்தோராகவே இருக்கின்ற நிலையில் ஊழலுக்கெதிராக திறன்மிக்க ஸ்தூலமான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் ஊழலுக்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வெறும் வார்த்தைகளை பிரயோகிப்பது உண்மையில் ஏமாற்றுத்தனமேயன்றி வேறல்ல. இவ்வாறு செய்வது இரட்டை வேடம் தரித்த ஏமாற்று பிரசாரமேயாகும்.

உதாரணத்திற்கு ஏழை மக்கள் பயன்பெறுவதற் கென்று கடந்த இருபதாண்டுகளில் 18க்கும் குறையாத திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம், அந்தியோத்ய அன்ன யோஜனா ஆகியவை இதில் அடங்கும். ஆனால் இத்திட்டங்கள் எவையும் அவற்றின் இலக்கை அதாவது ஏழை மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி வறுமையை ஒழிப்பது அல்லது குறைப்பது என்ற இலக்கை அடையவில்லை. பிரச்சினையின் நுனியைக்கூட அணுகவில்லை. காரணம் ஒன்றுதான். இத்திட்டங்கள் எவற்றிலும் அதன் பலன்கள் கடைசி பயனாளிகளுக்கு கசிந்து செல்ல

தொடர்ச்சி 6ம் பக்கம்

## தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா

# விழிப்புணர்வு கொண்ட அழுத்தமும் தொடர்ச்சியான கண்காணிப்பும் தான் இந்த மசோதாவின் அதிகபட்ச ஆதாயத்தை பெற முடியும்

5ம் பக்கம் தொடர்ச்சி

வில்லை. இத்திட்டங்களை அமல்படுத்திய அதே நிர்வாக இயந்திரமும் அரசு அதிகார வர்க்கமும்தான் இத்திட்டத்தையும் அமல்படுத்தப்போகிறது. அப்படியானால் இத்திட்டத்தின் பலன்கள் மட்டும் எவ்வாறு இலக்காக கொள்ளப்பட்ட ஏழைகளிலும் ஏழை மக்களை சென்றடையும்? சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஆதார் திட்டம் அல்லது பணமாற்றம் திட்டம்கூட சர்வவல்லமை கொண்ட இடைத்தரகர்களையும் புரோக்கர்களையும் ஒழித்துக்கட்டாது. அரசாங்கம் ஊழலை கண்டும் காணாமல் இருக்கின்ற வரையில் இவர்களே கோலோச்சுவர். ஏழை மக்களுக்கு பயனளிக்க வேண்டும் என்பதற்காக கடைக்கோடி கிராமத்திலுள்ள ரேஷன் கடைகள் அல்லது நியாய விலைக்கடைகளில்கூட தகவல் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்த வேண்டுமென்று இத்திட்டத்திற்கு வக்காலத்து வாங்குபவர்கள் கனவு காணலாம். ஆனால் யதார்த்தம் யாதெனில் புதிதாக அறிமுகமாகும் எந்தவொரு மென்பொருள் கருவியும் பணக்காரர்களுக்கு மட்டுமே பயனளிப்பதாகவும் ஏழை மக்கள் அவற்றை வாயைப்பிளந்து கொண்டு எட்ட நின்று வெறுப்போடு வேடிக்கை மட்டுமே பார்க்க முடியும் என்ற நிலையில் இத்திட்டத்தில் மென்பொருள் கருவிகளை உபயோகிப்பது எந்த அளவிற்கு சாத்தியமாகும் என்ற கேள்வி நிச்சயமாக ஒருவர் மனதில் எழத்தான் செய்யும். இந்த உண்மைகளெல்லாம் அதிகாரத்தின் உச்சாணியில் இருப்போருக்கு நன்கு தெரியும் என்பது அவ்வப்போது அவர்களையும் அறியாமல் அவர்களது கருத்துக்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடியும். ஏழை மக்களுக்கென்று அரசாங்கம் செலவிடும் ஒவ்வொரு ரூபாயிலும் ஒரு சில பைசாக்களே யாருக்கு சேர வேண்டுமோ அவர்களை சென்றடைகின்றன என்று சில மாதங்களுக்கு முன்பு நமது மாண்புமிகு பிரதமரே பகிரங்கப்படுத்திவிட்டார்.

### அறிவிப்புகளும் மசோதாவின் நிபந்தனை வாசகங்களும் எதைக்குறிக்கின்றன:

*பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்கள்பால் தனக்குள்ள பொறுப்பை அரசாங்கம் மறுக்கிறது*

பொய்யான வாதங்கள் வார்த்தை ஜாலங்களால் குழப்புவது, ஊழல் குறித்து மௌனம் சாதிப்பது ஆகிய அனைத்தும் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குதல் என்ற கேள்வி வரும்போது இந்த தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் அரசாங்கத்தின் இரக்கமற்ற கோரமுகம் அப்பட்டமாக வெளியாகிறது. நாம் ஏற்கனவே இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டது போல் மசோதாவின் பிரிவு 9ம் 52ம் ஒன்றுக்கொன்று முரணாக நிற்கின்றன. இவ்விரண்டு பிரிவில் எது உண்மை? பேரிடரால் பாதிக்கப்படும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணைபோக வேண்டும் என்று மாநில அரசாங்கங்கள் மீது சில பொறுப்புகளை பிரிவு 9 சுமத்துகிறது. மற்றொரு பிரிவான 52ல் பேரிடர் பாதிப்புகளுக்கு ஆள்வோரின் பொறுப்பை ஏற்பதற்கு முற்றிலுமாக மறுக்கிறது. ஒன்றுக்கொன்று முரணான இவ்விரு பிரிவுகளும் திருத்தப்பட்டு அவற்றின் முரண்பாடுகள் களையப்பட்டு பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை அரசாங்கம் முழுமையாகவும் எவ்வித நிபந்தனையின்றியும் ஏற்கவேண்டும்.

### ஒரு சுதந்திர நாட்டின் பிரஜைகள் தானதருமத்தை எதிரநோக்கி உயிரவாழ வேண்டும் என்ற அவமானகரமான சுமையோடு வாழவேண்டிய நிலை ஏன்?

மேலே விவரித்தவற்றையெல்லாம் தொகுத்துக் கூறுவோமாயின் தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா எப்போது முதல் அமலுக்கு வருகிறதோ அப்போதே சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளாகிவிட்ட போதிலும் இன்னமும் ஏராளமானோர் (இவர்களின் எண்ணிக்கை எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்) இந்த நாட்டில் ஏழைகளாக உள்ளனர் என்ற உண்மையையும் இந்த ஏழை மக்கள் ஒரு வேளை உணவைக் கூட வாங்கும் சக்தியில்லாமல் அரசாங்கத்தின் தானதருமத்தை எதிர்பார்த்து கையேந்திய நிலையில் வாழ்கிறார்கள் என்ற உண்மையையும் அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கீழ் காலனி நாடாக இருந்தபோதுகூட ஏழைகள் இருந்தார்கள்தான். ஆனால் இவ்வளவு நீண்ட சுதந்திர ஆண்டுகள் அவர்களின் நிர்க்கதியான நிலையிலிருந்து அவர்களை மேம்படுத்தவில்லை. மலைவாழ் மக்கள், பூர்வீகக்குடிகள், கடைக்கோடி கிராமங்களில் வாழ்வோர் ஆகியோரின் வாழ்நிலை இந்த உண்மைக்கு சான்று பகரும். அவர்களது வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாதது மட்டுமல்ல வறுமை, கல்வியறிவின்மை, பாதுகாப்பற்ற வாழ்க்கை என்ற அதலபாதாளத்தில் அவர்கள் வீழ்ந்துவிட்டனர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக தனது பெருமையையும் செல்வச்செழிப்பையும் அவ்வப்போது பறைசாற்றிக்கொள்ளும் சுதந்திர இந்தியா காலனீய இந்தியாவில் இருந்த ஏழைகளோடு சேர்த்து அதைவிட அதிகமான ஏழை மக்களை உருவாக்கிவிட்டது. இந்த ஏழைகள் மிக வேகமாக தங்களிடமுள்ள மிச்சசொச்சத்தையும் இழந்துவிட்டனர் அல்லது வேகமாக இழந்து வருகின்றனர். அதிகரித்து வரும் ஏழைகளின் எண்ணிக்கைக்கு கடிவாளம் போடுவதற்கு அரசாங்கமும் அதிகாரத்திலிருப்போரும் பித்துப்பிடித்தவர்களைப் போல முயல்கிறார்கள். வறுமையை ஒழிப்பதில் தாங்கள் எவ்வளவு திறமையோடு செயல்படுகிறோம் என்பதை காட்டிக்கொள்வதற்கு முயல்கிறார்கள். ஆனால் அவர்களின் சொந்த செயல்களே உண்மைக்கு சான்று பகர்கின்றன. வெளிச்சந்தையிலிருந்து தங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை வாங்குவதற்கான வாங்கும் சக்தி இல்லாத மக்கள் அதிக எண்ணிக்கையில் இல்லாமலிருந்திருந்தால் உணவுப் பாதுகாப்பு மசோதா என்ற திட்டம் அமல்படுத்தவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. இயற்கையாகவே எழும் முதல் கேள்வி: இந்த அளவிற்கு மோசமான நிலைக்கு இந்நாட்டு மக்கள் ஏன் எவ்வாறு தள்ளப்பட்டனர்? சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு குடிமகனும் தனது சக்திக்கும் ஆற்றலுக்கும் உட்பட்டு பொருளுற்பத்தியிலோ அல்லது சேவையிலோ ஆக்கபூர்வமாக உழைத்து சமூக முன்னேற்றத்தில் தங்களுக்குரிய பங்காற்றுவர் என்ற உறுதியோடுதானே தீரமிக்க விடுதலை போராட்ட வீரர்கள் நாட்டின் ஒளிமிக்க சுதந்திர போராட்டத்தை நடத்தினர்? இவ்வாறு தங்களுக்குரிய பங்காற்றுவதன் மூலம் அதற்கு பதிலாக நாகரீகமான வாழ்விற்கு தேவையான குறைந்தபட்ச அடிப்படைத்தேவையையேனும் பெற்று மகிழ்வர் என்ற நம்பிக்கையில்தானே அவர்கள் தங்கள் இன்னுயிரையும் ஈந்து நாட்டிற்கு விடுதலை பெற்றுத்தந்தனர்? அப்படியிருக்க சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகளாகிவிட்டபிறகும் உயிர்பிழைத்திருப்பதற்கு தேவையான அடிப்படைத்தேவைகளுக்காகக்கூட அரசாங்கத்தின் தயை தாட்சண்யத்தை எதிர்பார்த்து கையேந்தி நிற்கவேண்டிய நிலைக்கு அவர்கள் சீரழிந்துபோனது ஏன்? பல பத்தாண்டுகளாக நாட்டின் பெரும்பாலான மக்களை தொடர்ந்து பிச்சையையும் தானதருமத்தையும் எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் வைத்திருக்கும் இச்சமூக அமைப்பு முறையை இன்னமும் நீடித்திருக்கச்செய்வது நாம் விரும்பத்தக்க ஒன்றா அல்லது வெட்கித்தலைகுனிய வேண்டிய விஷயமா? இந்த தானதருமங்கள் அவர்களுக்கு உண்மையிலேயே உதவி அவர்களது வாழ்வை மேம்படுத்தி கௌரவத்தோடு வாழ்வதற்கு வழிகோலுமா? அல்லது இந்த இழிநிலையில் அவர்களை வைத்திருக்கின்ற கட்டுத்தளைகளோடு அவர்களை மேலும் பரிதாபகரமாகவும் அவமானகரமான முறையிலும் மேலும் இறுக்கமாக பின்னிப்பிணைந்து மேலே எழமுடியாதபடி அதலபாதாளத்தில் அவர்களை முற்றிலுமாக தள்ளிவிடுமா? 5 கிலோவோ அல்லது 7 கிலோவோ உணவு தானியங்கள் வழங்குவதன் மூலம் மட்டுமே அவர்களை வறுமையிலிருந்து மீட்டுவிடமுடியுமா?

மேலும் இந்த ஏழை மக்கள் மனித ஜீவன்கள் என்ற முறையில் வாழ்வின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? இயற்கையின் தாக்கங்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கு தலைக்கு மேல் ஒரு கூரையும் நான்கு பக்கத்திலும் ஸ்திரமான சுற்றுச்சுவரும் அவர்களுக்கு வேண்டாமா? அவர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் முறையான நாகரீக கல்வி அவசியமல்லவா? அவர்களுக்கு சரியான உடைகள் வேண்டாமா? அல்லது கந்தலையும் கிழிசலையும் கட்டிக்கொண்டு தங்களது மானத்தை மறைப்பதற்கு முடியாமல் அவமானப்படவேண்டுமா? இத்தேவைகளையெல்லாம் உத்யோகம் இன்றி அவர்களால் பெற இயலுமா? வாழ்வின் குறைந்தபட்ச அடிப்படை தேவைகளையும் வாழ்வாதாரங்களையும் பூர்த்தி செய்துகொள்வதற்கேற்ற வகையில் அவர்களின் வாங்கும் சக்தி உயருமளவிற்கான வருமானத்தை கொடுக்கும் வேலை அவசியமல்லவா? கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவு வழங்குதல் பற்றி பேசுகையில் அரசுத்துறையில் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் முறையான பணியிலிருக்கும் பெண்களுக்கு இப்பலன்கள் கிடையாது என்று திட்டவட்டமாக கூறுகிறது. முறையான பணியிலில்லாத அல்லது பணி புரியாத பெண்கள் ஏராளமாக உள்ளனர் என்ற உண்மையையும் இவர்கள் தங்களின் குறைந்தபட்ச ஆரோக்கியத்திற்கும் ஆரோக்கியமான மகப்பேறுக்கும் அரசாங்கத்தின் தாட்சண்யத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என்ற உண்மையையும் இதன் மூலம் அரசாங்கம் வெட்கமின்றி ஒப்புக்கொண்டுள்ளது.

சுதந்திரம் பெற்று இத்தனை ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தற்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐ மு கூ அரசாங்கம் உட்பட தங்கள் சொந்தக்காலில் நின்று உண்மையான கௌரவத்தோடும் கண்ணியத்தோடும் வாழுகின்ற வகையில் வறுமையின் கோரப்பிடியிலிருந்து இப்பெண்களை மீட்பதற்கு ஸ்தூலமான நடவடிக்கைகள் எவற்றையேனும் மேற்கொண்டனவா? தங்களது சொந்த சம்பாத்தியத்தில் அடிப்படைத்தேவைகளையேனும் பூர்த்தி செய்துகொள்வதற்கேற்ற வகையில் அவர்களுக்கு முறையான தொடர்ந்த வருமானம் வரக்கூடிய உத்யோகத்தையும் வாழ்வாதாரங்களையும் வழங்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு அன்றி வேறு யாருக்கு இருக்க முடியும்? அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இதுவா அல்லது தாங்கள் பாதுகாத்து போற்றிப்பேணிவரும் சமூக அமைப்பு முறை உருவாக்குகின்ற நெருக்கடியிலிருந்து ஏகபோக வர்த்தகர்கள் கார்ப்பொரேட் முதலாளிகள் மற்றும் இதுபோன்ற கொடுத்து வைத்த ஒரு சிலரை மீட்பதற்காக மக்களின் வரிப்பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை தொழில் ஊக்குவிப்பு என்ற பெயரில் அள்ளி வீசுவதுதான் ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் பொறுப்பா?

இந்தக்கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில்தான் உள்ளது. நாட்டின் முதலாளித்துவ அமைப்புமுறைதான் இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் ஆணிவேராக உள்ளது. வேலையின்மை, வறுமை, கல்வி, உறைவிடம், மருத்துவ வசதியின்மை ஆகிய அனைத்து பிரச்சினைகளும் கடுமையான முதலாளித்துவ சுரண்டலோடு கைகோர்த்துள்ளன. ஒவ்வொரு தேர்தலுக்கு பிறகும் ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் அனைத்தும் ஆட்சி அதிகாரத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக தங்களது எஜமானர்களான முதலாளித்துவ ஏகபோக வர்க்கத்தை சேர்ந்தோருக்கு சேவை செய்கின்றன. இந்த அமைப்பு முறை தொடர்ந்து நடைபெறுவதற்கு உகந்த கொள்கைகளையே இந்த அரசாங்கங்கள் மேற்கொள்கின்றன. இவ்வாறாக வெவ்வேறு வார்த்தைகளை உபயோகித்தாலும் சுதந்திர இந்தியாவில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் தனது குடிமக்கள் அனைவரும் கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான போதிய உணவுப்பொருட்களை கட்டுபடியாகக்கூடிய விலையில் வழங்குகிறோம் என்று திரும்பத்திரும்ப கூறி வந்திருக்கின்றன. ஆனால் இவ்வாறு அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு சொன்னார்களோ அவ்வளவுக்கவ்வளவு நிலைமை மோசமாகத்தான் ஆனதோடு எவ்வளவுக்கெவ்வளவு பணக்காரர்களாகவும் உணவு உற்பத்தி விற்பனைத்துறையில் பெரும்புள்ளிகளாகவும் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களும் அவர்களது கூட்டாளிகளும் நல்ல பலன் பெற்றிருக்கிறார்கள். உண்மையில் இந்த முதலாளித்துவ அமைப்புமுறை எத்தனை காலம் நீடித்திருக்கிறதோ அதுவரையில் வாழ்வின் அடிப்படை பிரச்சினைகள் எவற்றுக்கும் விடிவு கிடையாது அப்பிரச்சினைகள் எவ்வளவு கடுமையாகவும் மனவலியையும் அவமானத்தையும் கொடுத்தபோதிலும். இந்த உண்மையை மக்கள் நோக்கவேண்டும். அதே சமயம் இந்த அமைப்புமுறையை மாற்றுவது விரைவாக நடந்தேறக்கூடியது என்றோ எளிமையானது என்றோ நினைக்கவும் கூடாது. மாறாக முதலாளித்துவ சுரண்டலும் அடக்குமுறையும் சற்றும் தளராது கடுமையாகும். ஆகவே மக்கள் தங்கள் முன்பு ஸ்திரமாக நிற்கும் முதலாளித்துவ அமைப்பு முறையை தூக்கியெறியவேண்டும் என்ற இறுதி லட்சியத்துடன் தங்கள் வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி ஜனநாயக வெகுஜன இயக்கங்களை துவக்கி அவற்றை உக்கிரப்படுத்தவேண்டும். தங்களது இறுதி லட்சியத்திற்கு உகந்த வகையில் இவ்வியக்கங்களை வழிநடத்தவேண்டும். அதாவது இந்த அமைப்பு முறையை தூக்கியெறியவேண்டும் என்ற இலட்சியம்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 65வது ஸ்தாபக தின பொதுக்கூட்டம்

*1ம் பக்கம் தொடர்ச்சி*

தடைசெய்யப்பட்ட கட்சியா? இந்தப் பத்திரிகைகள் தீவிரவாத கட்சிகளைப் பற்றியும் ஜாதிய, மதவாத, இனவாத கட்சிகளைப் பற்றியும் கொட்டை எழுத்துக்களில் செய்திகளைப் போடுகின்றன. எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியைப் பற்றி செய்திகள் வெளியிட்டால், மக்கள் இந்தக் கட்சியை தங்கள் கட்சியாக அடையாளங் கண்டுகொண்டுவிடுவார்கள். அது முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு ஆபத்தாகவே முடியும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவேதான், வேண்டுமென்றே எமது கட்சி எஸ் யு சி ஐ பற்றி அவர்கள் செய்தி வெளியிடுவதில்லை. இன்று முதலாளிகள் கடுமையான நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர். காங்கிரஸிலோ சிறு குழந்தை ராகுல் காந்தியை பிரதமராக முன்னிறுத்துகிறார்கள். வாரிசு அரசியல், குடும்ப ஆட்சி இந்நாட்டில் தொடர்கிறது. ஆனால் காங்கிரஸின் ஊழல்கள் நித்தம் நித்தம் வெளி வருகின்றன. முதலில் ராஜுவ் காந்தி காலத்தில் ரூ 64 கோடி போஃபர்ஸ் ஊழல், இப்பொழுது 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் திமுகவின் முன்னாள் தொலைத்தொடர்பு துறை கேபினட் அமைச்சர் ராஜாவின் 1.76 லட்சம் கோடி ஊழல், புதிய ஊழல் என்னவெனில் நிலக்கரி வயல்கள் ஒதுக்கீட்டில் 10 லட்சம் கோடிக்கும் அதிகமான ஊழல் நடைபெற்றுள்ளது. இது, தற்பொழுது உச்ச நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த ஊழலை விசாரித்த சிபிஐ (CBI) சுதந்திரமாக விசாரிக்க விடவில்லை. உச்ச நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்யவிருந்த அறிக்கையில் மாற்றத்தை செய்கிறார் மத்திய சட்ட அமைச்சர். எல்லா விசாரணைகளிலும் தலையீடு. எல்லா ஊழல்களையும் புதைத்துவிடுகின்றனர். இதில் கூட்டுப் பாராளுமன்ற குழுவை அமைப்பார்கள். இந்த குழுவால் கூட முழு உண்மை வெளியில் வராது. இந்த குழுவிற்கு பி சி சாக்கோ தலைமை தாங்குகிறார். எல்லா ஊழல்வாதிகளையும் காக்கவும் உதவவும், ஊழல்களை மூடிமறைக்கவும்தான் இந்த பாராளுமன்ற கூட்டு குழு உதவுகிறது. எந்த ஒரு ஊழலையும் இந்தக்குழு அம்பலப்படுத்தியதில்லை. இந்த நாடு ஏமாற்றுப் பேர்வழிகளாலும் ஊழல்வாதிகளாலும் தான் ஆட்சி செய்யப்படுகிறது.

ஒருபக்கம் காங்கிரஸின் ஊழல்களைப் பார்த்தோம். மறுபக்கம் பிஜேபி எப்படிப்பட்ட கட்சி? என்டிஏ (NDA) அரசாங்கத்தில் பிஜேபி இருந்தபோது கார்கில் போரில் உயிர்துறந்த ராணுவவீரர்களை அடக்கம் செய்ய வாங்கப்பட்ட சவப்பெட்டியில் கூட ஊழல் செய்தார்கள். முதன்முறையாக தென்னிந்தியாவில், கர்நாடக மாநிலத்தில் பிஜேபி பதவிக்கு வந்தது. வந்த சில நாட்களிலேயே தொடர்ச்சியாக ஊழல்கள். பெல்லாரியில் ரெட்டி சகோதரர்கள் சட்டவிரோதமாக இரும்புத்தாதுக்களை தோண்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். இதற்கு முதலமைச்சர் எடியூரப்பா உடந்தையாக இருந்தார். காங்கிரஸாவது நீண்டகாலம் பதவியில் இருந்தது. பிஜேபியோ பதவிக்கு வந்த மறுகணமே மிகப்பெரிய ஊழல்களில் திளைத்தது. ஆனால் மக்களின் நிலைமை எப்படியிருக்கிறது? மக்கள் வறுமையில் உழல்கிறார்கள். அத்தியா வசிய பொருட்களின் விலை விண்ணை முட்டுகிறது. மின்சாரக் கட்டணம், பஸ் கட்டணம், கல்வி கட்டண உயர்வு என்று மக்கள் வாட்டி வதைக்கப்படுகின்றனர். தண்ணீர் கூட தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டிருக்கிறது. மக்களின் நிலையோ மிகப் பரிதாபமாக இருக்கிறது. மூச்சு முட்டி சாவின் விளிம்பிற்கே மக்கள் தள்ளப்படுகின்றனர். அதே சமயம் ஆட்சியாளர்கள் ஊழலுக்குப்பின் ஊழல் செய்து கோடிக்கணக்கில் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாதாரண விவசாயிகளின் நிலை எப்படி இருக்கிறது? அவர்கள் தற்கொலைக்கு தள்ளப்படுகின்றனர். மகாராஷ்டிராவில் விதர்பா விவசாயிகள், ஏன் கேரளாவில்கூட விவசாயிகள் இந்த துரதிருர்ஷ்டமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். சில மாநிலங்களில் மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இறக்கின்றனர். அரசாங்க கணக்குபடி கடந்த ஐந்து ஆண்டுகளில் 2லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

தொழிலாளர்களின் நிலைமை எப்படி இருக்கிறது? அமெரிக்காவின் சிகாகோ நகரத் தொழிலாளர்கள் உயிரை மாய்த்து, ரத்தத்தை சிந்தி பெற்றுத்தந்த 8 மணி நேர வேலை என்ற உரிமையைகூட இன்று ஆட்சியாளர்கள் பறித்துவிட்டனர். சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பணிபுகின்ற சாப்ட்வேர் பொறியாளர்கள் 8 மணி நேரம்தான் வேலை செய்கிறார்களா? சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் வேலை நேரம் என்பதேயில்லை! அங்கே எந்த ஒரு நியதியும் இல்லை. எந்த சட்டமும் அங்கே செல்லுபடியாகாது. ஆகவே, ஆட்சியாளர்கள் சந்தோஷமாக இப்படிப்பட்ட பல சிறப்பு பொருளாதார மண்டலங்களை திறந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் 62 சதவீத தொழிலாளிகள் தினக்கூலிகளாக, ஒப்பந்த தொழிலாளர்களாக வேலை செய்கிறார்கள் என்று உலகவங்கியின் அறிக்கை கூறுகிறது. அவர்களுக்கு எந்த ஒரு பணிப்பாதுகாப்பும் இல்லை. பென்ஷன் போன்ற சமூக பாதுகாப்பு திட்டங்கள் மறுக்கப்படுகின்றன. நிரந்தர பணிகளை ஒப்பந்தப் பணிகளாக்கக் கூடாது என்று சட்டம் கூறுகிறது. இருப்பினும் கூட 62 சதவீத தொழிலாளர்கள் ஒப்பந்தப் பணியாளர்களாக தனியார் மட்டுமல்ல, பொதுத்துறைகளிலும் பணியமர்த்தப்படுகின்றனர். இந்த நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் உழைத்த இத்தொழிலாளர்கள் முதுமை அடைந்துவிட்டால் அவர்களுக்கு ஒய்வூதியம் அளிப்பது இந்த சமூகத்தின், அரசாங்கத்தின் கடமையல்லவா? நிரந்தரப் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக்கூட ஒய்வூதியம் என்ற பெயரில் அவர்களின் ஊதியத்தில் திரட்டிய பணத்தை பங்கு சந்தையில், ஊகவணிகத்தில் முதலீடு செய்கிறார்கள். இந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு கிடைக்கும் ஒய்வூதியம் மிகச் சொற்பமாக இருக்கிறது. இந்தத் தொகையில் வாழ்வது மிகக் கடினம்.

அடுத்து, நாட்டின் கலாச்சார நிலையும் படுகேவலமாக இருக்கிறது. தினசரி பாலியல் பலாத்காரம் தலைநகரான டெல்லியிலேயே நடக்கின்றது. 5 வயது சிறுமி கூட பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறாள். சென்ற வருடம் மருத்துவம் படித்துக் கொண்டிருந்த மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். இது வெறும் பாலியல் பலாத்காரம் மட்டுமல்ல. அந்தப் பெண்ணின் உடலில் மதுபாட்டில் துண்டுகளும் பிளாஸ்டிக் பொருட்களும் இருந்தனவென்றால் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் செய்யும் செயலா இது? மிருகத்தனமான கொடூரமான வக்கிரச்செயல். இந்த நாட்டில் பெண்கள், குழந்தைகள் மானத்தோடு, மரியாதையோடு நடமாட முடியாத சூழல்தான் இருக்கிறது. இது ஒன்றும் விபத்து அல்ல, ஏதோ சில வக்கிரபுத்திக்காரர்களால் நடத்தப்பட்ட செயல் அல்ல. இதைப் பற்றி ஆழமாக சிந்திப்பது அவசியமாகும்.

1948ல் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரும் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், மார்க்சியத்தை செழுமைப்படுத்தி, பருண்மைப்படுத்தியவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை உருவாக்கினார். இக்கட்சி ஸ்தாபிக்கப்பட்ட போதே இந்தியாவில் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தை கைப்பற்றியதன் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இந்திய முதலாளிகள் கைகளுக்கு ஆட்சியதிகாரம் மாறியது. அன்று முதல் இன்றுவரை அனைத்து ஆட்சியாளர்களும் இந்திய ஏகபோக முதலாளிகளின் நலன்களையே பாதுகாத்துவருகின்றனர்.

இந்திய முதலாளிகள் ஆட்சிக்கு வரும்போது வரலாற்று ரீதியாக உலக முதலாளித்துவம் பிற்போக்கு தன்மையை அடைந்திருந்தது. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் மட்டுமே 1948லேயே இந்திய முதலாளித்துவமானது உலக முதலாளித்துவ நெருக்கடியின் நிழலில் உருவானது என்பதை சுட்டிக்காட்டினார். இன்று முதலாளித்துவமானது உச்சகட்டத்தை அடைந்து பிற்போக்காகி, அழுகி, சாகும்தறுவாயை அடைந்துவிட்டது. முதலாளித்துவம் தன் ஆரம்பகாலத்தில் தனிநபர் சுதந்திரத்தை உயர்த்திபிடித்து, மூடநம்பிக்கைக்கு, பழைமைவாதத்திற்கு எதிராக சமரசமற்று போராடி சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் எனும் மனிதநேய கோட்பாடுகளை உயர்த்திபிடித்து, அன்று முதலாளித்துவம் முற்போக்கு தன்மையை பெற்றிருந்தது. பிறகு அது காலாவதியாகி, சீரழிந்து, பிற்போக்காகிவிட்ட காலத்தில் இந்தியாவில் முதலாளித்துவம் ஆட்சியதிகாரத்திற்கு வந்தது. சோஷலிசவாதி என்ற போர்வையில் நேருவால் கவர்ச்சிகர திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவையனைத்தும் இந்திய முதலாளிகளின் நலன்களையும் முதலாளித்துவ அமைப்பையும் காக்கவே செயல்படுத்தப்பட்டன என்று தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே மற்றனைத்து கட்சிகளிடமிருந்தும் தெள்ளத்தெளிவாக மாறுபட்டிருந்தது. அப்போதைய ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானது (சிபிஐ) இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. நிலப்பிரபுத்துவமும் அந்நிய ஏகாதிபத்தியமும் அரசு அதிகாரத்தில் இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது என்றும் இந்திய பாட்டாளிவர்க்க புரட்சியின் கட்டம் 'மக்கள் ஜனநாயக புரட்சி'யே என்றும் கூறியது. ஆனால் இந்தியாவில் முதலாளித்துவ பொருளாதாரம் கிராமப்புறங்களில் கூட ஊடுருவியிருக்கிறது. கலாச்சார அம்சங்களில் வேண்டுமெனில் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ பழக்கவழக்கங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியா முதலாளித்துவ பொருளாதாரம் ஒன்றுகுவிக்கப்பட்ட ஒரு முதலாளித்துவ நாடு மட்டுமல்ல இன்று இந்தியா ஒரு ஏகாதிபத்தியநாடு. மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் ஒரு இளைய பங்குதாரர் என்பதை சிந்திக்க தெரிந்த எவராலும் மறுக்கமுடியாது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் அல்லது பிரான்ஸ் போன்ற பெரிய ஏகாதிபத்தியமாக இல்லாதிருக்கலாம். ஆனால் இந்தியா நிச்சயமாக குறைந்தபட்சம் ஒரு ஏகாதிபத்திய நாடு, ஏகாதிபத்திய குணங்களைக்கொண்ட நாடு. அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்படி மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு அந்நாடுகளுக்கு நெருக்கடி கொடுக்கிறதோ அப்படியே இந்தியாவும் கூட செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏகாதிபத்தியமானது நெருக்கடியில் சிக்கி, மடியும் தறுவாயில் இருக்கிறது, ஆகவேதான் இந்நெருக்கடியானது வளர்ந்த ஏகாதிபத்தியங்கள் மட்டுமல்லாமல் எல்லா நாடுகளையும் சூழ்ந்திருக்கிறது. அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் என எல்லா நாடுகளிலும் பொருளாதார தேக்கம், மந்தநிலை ஒரே மாதிரியாக இருக்கிறது. பெரிய நிதி நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவருகின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து தூக்கியெறியப்படுகிறார்கள். இந்தியாவையும் கூட இந்நெருக்கடி சூழ்ந்துகொண்டிருக்கிறது. மன்மோகன்சிங்கும் சிதம்பரமும் கூட இதை சொல்லுகிறார்கள். எனவே இனியும் தனது வாழ்நாளை முதலாளித்துவம் நீடித்துக்கொள்ள முடியாது. இப்பின்னடைவு அரசியல் ஸ்திரமின்மையையும் கலாச்சார சீரழிவையும் ஏற்படுத்துகிறது. சாகும் தறுவாயிலுள்ள முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் மட்டுமல்லாமல் கலாச்சாரத்திலும் ஸ்திரமின்மையை உருவாக்குகிறது என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த அரசியல்வாதிகள் எவ்வித வெட்கமும் மானமுமின்றி பொய்களையும் ஏமாற்றுத் தந்திரங்களையும் செய்துவருகிறார்கள் என்பதை தினந்தோறும் பத்திரிகை வாசிப்பவர்கள் தெரிந்து கொள்ளமுடியும். சற்று கூர்ந்து கவனிப்போம் என்றால் சில ஊழல்களைப் பற்றி சிலசமயங்களில் இந்த பத்திரிகைகள், கூவும். ஆனால் இந்தப் பத்திரிகைகள், ஊடகங்கள் வேறொரு சமயத்தில் நேர் எதிரான நிலையை எடுக்கும். இவைகளுக்கும் குறுகிய நலன்கள் உண்டு என்பதை புரிந்து கொள்வது கடினமல்ல. எஸ் யு சி ஐ கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் உண்மைக்காக, கொள்கைக்காக உயர்ந்த கலாச்சாரத்தினடிப்படையில் இந்த கட்சியை வளர்த்துவருகிறோம். எந்த சுயநலமோ அல்லது குறுகிய நலனோ எமது கட்சியின் தலைவர்களிடமும் தொண்டர்களிடமும் காண முடியாது. இந்த கட்சி வளர்ந்து வருகிறது. இங்கே, உங்களிடம் நாங்கள் வேண்டுவதெல்லாம், எங்கள் கட்சியை அறிந்து, ஆய்ந்து, ஆதரவு தாருங்கள். எவரேனும் உண்மையை தெரிந்துகொள்ள வேண்டுமெனில், மெய்யான அரசியலை அறியவேண்டுமெனில் ஒரு புதிய, மற்ற அரசியல் கட்சியினின்று முற்றிலும் மாறுபட்ட கட்சியை, உண்மையான பாட்டாளிவர்க்க கட்சியை அடையாளம் காண விரும்பினால், அது எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஒன்றுதான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்தக் கட்சியில் எந்த ஒரு உட்கட்சி பூசலும் இல்லை. தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் ஒரே நோக்கம், ஒரே சிந்தனைப் போக்கு, ஒரே குறிக்கோளோடு சிறந்த ஒழுக்க நன்னெறிகளின் அடிப்படையில் இக் கட்சியின் தலைவர்களையும் தொண்டர்களையும் உருவாக்கினார்.

எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சி நாடெங்கிலும் வெகுஜன இயக்கங்களை உயர்ந்த கொள்கைகளினடிப்படையில், கோரிக்கைகள் வெற்றிபெறும் வரையில் தொடர்ந்து கட்டிவருகிறது. மக்களின் கோரிக்கைகளுக்கான இயக்கங்கள் என்ற போராட்ட பாதை மட்டும்தான் முதலாளித்துவ பொருளாதாரத்

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 30th April 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க ஜாதி மத இன வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுபட்டு போராடுவீர்

7ம் பக்கம் தொடர்ச்சி

தாக்குதல்களிலிருந்தும் சந்தர்ப்பவாதத்திலிருந்தும் மக்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ளமுடியும். இந்த இயக்கங்களால்தான் தொழிலாளர்கள் மற்றும் அனைத்துத் தரப்புமக்களின் ஒற்றுமையையும் உறுதி செய்ய முடியும்.

வலிமைவாய்ந்த ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்கள் இல்லாத சூழலைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியாளர்கள் குறுகியவாதத்தையும் வெறித்தனத்தையும் விதைத்து பாசிசத்தை கொண்டு வருகின்றனர். அறிவிக்கப்படாத அவசரநிலைதான் இன்று இருக்கிறது. அனைத்து ஜனநாயக உரிமைகளையும் மிகத் தந்திரமாக பறித்து வருகின்றனர். தொழிலாளர்களின் உரிமைகளை மிகக் கொடூரமாகத் தாக்குகிறார்கள். அனைத்து மக்களின் எரியும் அன்றாடப் பிரச்சினைகளுக்காக ஜாதி, மத, இன வேறுபாடுகளைக் கடந்த ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்கள்தான் தொழிலாளர்கள், சாதாரண மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கும். இந்த சமுதாய அமைப்பினால், இந்த ஆட்சியாளர்களால் அனைத்துத் தரப்பு மக்களும் நித்தம் நித்தம் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். எமது கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினருமான தோழர் கிருஷ்ண சக்ரவர்த்தி அவர்கள் ''மைனரிட்டி'' எனும் கருத்துப் பற்றி கூறியதை இங்கே நினைவுகூற விரும்புகிறேன். ஒரு நபர் தான் ஒரு மைனரிட்டி சமூகத்தையோ ஜாதியையோ சார்ந்தவர் என்று நினைத்துவிட்டால் அவர் ஒரு மைனரிட்டிதான். ஆனால், அதே நபர் தான் ஒரு தொழிலாளி என்று எண்ணினால், அவர் ஒரு மெஜரிட்டி வகுப்பைச் சார்ந்தவர். உலகமுழுவதுமுள்ள உழைக்கும் பாட்டாளிகள் வர்க்கத்தைச் சார்ந்தவராகி விடுகிறார். எனவே மார்க்ஸ் அவர்கள் விடுத்த அறைகூவலை ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற சொற்களை நினைவிற்கொள்வோம். உழைக்கும் மக்களின் இயக்கங்கள் உலகமுழுவதும் வெடித்து வருகின்றன. டூனிசியா, எகிப்து போன்ற நாடுகளில் சுரண்டலுக்கு எதிராக, மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக போராடி வருகிறார்கள். இந்த காலகட்டத்தின் மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் உயர்ந்த புரட்சிகர லட்சியத்திற்காக பாட்டாளிவர்க்க விடுதலைக்காக இந்த கட்சியை ஸ்தாபித்தார். மக்கள் இந்த கட்சியைப் பற்றி, இதன் கொள்கைகளைப்பற்றி ஆழமாக அறிந்து கொள்ளவேண்டும் என்கிறவகையில் தான் இந்த ஸ்தாபகதினக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மக்கள் இந்தக் கட்சியை ஆதரிப்பார்கள், வலுப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் எனது உரையை முடிக்கிறேன்.

**புரட்சி ஓங்குக!**
**பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு செவ்வணக்கம்!**






ஏப்ரல் 27, 2013 அன்று எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 65வது ஸ்தாபக தின பொதுக்கூட்டம் சென்னை, வியாசர்பாடியில் நடைபெற்றது. தோழர் சி கே லூகோஸ், மத்தியக் கமிட்டி உறுப்பினர் உரையாற்றுகிறார். கூட்டத்தில் கலந்து கொண்டோர்.

# தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா...

6ம் பக்கம் தொடர்ச்சி

எவ்வாறு தவிர்க்கமுடியாததும் தேவையானதுமாகும் என்ற விழிப்புணர்வை மக்கள் பெறுகின்ற வகையில் இவ்வியக்கங்கள் வழிநடத்தப்படவேண்டும். இவ்வாறாக அரசாங்கங்களின் மீது மக்கள் தொடர்ந்து நிர்ப்பந்தங்களையும் இயக்கத்தின் அழுத்தத்தையும் தொடர்ந்து செலுத்தவேண்டும். இந்த இயக்கங்கள் தரும் நெருக்குதலால் ஏதேனும் ஒருசில கோரிக்கைகளுக்கு அரசாங்கங்கள் அவ்வப்போது செவிமடுக்கலாம். தங்களது பொறுப்பை தட்டிக்கழிப்பதற்கு அரசாங்கங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் அவர்கள் அளிக்கும் ஒருசில பலன்களும் மக்களுக்கு சொற்பமாகவே சென்றடைகின்றன என்றாலும் இயக்கங்களின் நெருக்குதலுக்கு அரசாங்கங்கள் சமயங்களில் அடிபணிந்தே தீரவேண்டியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில்தான் இந்த தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. மேலே விவரித்தபடி இந்த மசோதா முற்றிலும் நேர்மையற்ற திட்டமாகும். சக்திமிக்க நன்கு கட்டமைக்கப்பட்ட இயக்கங்கள்தான் இம்மசோதாவில் காணப்படும் குற்றங்குறைகளை கண்டறிவதற்கு மக்களுக்கு உதவும். தங்களது உணவுப்பாதுகாப்பிற்கு பிச்சையையும் தானதருமத்தையும் எதிர்பார்த்து காத்திராமல் தாங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த வருமானத்தில் தங்களுக்கு தேவையான உணவுப்பொருட்களையும் இதர அத்தியாவசியத்தேவைகளையும் வாங்கிக்கொண்டு தங்கள் சொந்தக்காலில் நிற்க முடியுமளவிற்கு வாழ்வாதாரங்களை உத்தரவாதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டும் என்பது இவ்வியக்கங்களின் முக்கியமான அம்சமாக இருக்கவேண்டும். இதுவெல்லாம் ஒரே நாளில் நடந்து விடக்கூடிய காரியமல்ல. அவ்வாறு நடக்கின்ற வரையில் தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதா திட்டத்திலும் அந்த்யோத்ய அன்ன யோஜ்னா திட்டத்திலும் சொல்லப்பட்டதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். இதுபோன்ற திட்டங்களில்கூட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மனதைச்சுடும் கேலிக்கூத்தாகவும் ஏமாற்றுத்தனமாகவும் இல்லாதிருப்பதை உறுதி செய்யவேண்டும். இதற்காக நாடு முழுவதிலும் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு மக்கள் கண்காணிப்பு கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும். அமைப்பு முறையில் காணப்படும் ஊழல் பெருச்சாளிகளின் கூட்டணியால் கையாடப்படாமலும் களவாடப்படாமலும் பலன்கள் முழுமையாக மக்களை சென்றடைகின்றனவா என்பதை இக்கமிட்டிகள் கண்காணிக்கும் வகையில் அவை உயிரோட்டத்துடன் பேணப்படவேண்டும். என்ன செய்யவேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் எந்த அளவிற்கு பெற்று விழிப்புணர்வுக்கான தங்கள் சொந்தக்கருவிகளான விழிப்புணர்வு கமிட்டிகளில் ஈடுபடுகிறார்களோ அந்த அளவிற்கு இம்மசோதா சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தத்தை செலுத்தி இத்திட்டத்திலிருந்து குறைந்தபட்ச பலன்கள் பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

## 127வது மே தின பொதுக்கூட்டம்






மே 1, 2013 அன்று 127வது மே தின பொதுக்கூட்டம் சென்னை, புளியந்தோப்பில் நடைபெற்றது. தோழர் அனவரதன் தமிழ்நாடு மாநிலத் தலைவர், அகில இந்திய யு டி யு சி உரையாற்றுகிறார். இக்கூட்டத்தில் கலந்து கொண்டோர்.
நெய்வேலியிலும் மே தினக் கூட்டம் நடைபெற்றது.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in